# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 158 — 1975 අප්‍රේල් 04 වැනි සිකුරාදා — 1975.04.04

158 ம் இலக்கம்—1975 ம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 04 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 101 |
| பதவிகள்—வெற்றிடம் | 102 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் | 105 |
| துணைவிதிகள் | 106 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | — |
| ஆதன விற்பனைகள் | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | — |
| நானாவித அறிவித்தல்கள் | 117 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராம சபைகள் கட்டளைச்சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச்சட்டத்தின் 37 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினேல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், இவ்வறிவித்தல் வாயிலாக, இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள குறுவிற்ற கோறளை மதபத்து கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையை நிர்வகிக்கும் உத்தியோகத்தருக்கு அக்கிராமப் பிரதேசத்தில் காணி வரியொன்றை அப்பிரிவின் கீழ் விதித்து அறவிடுதற்கு அதிகாரமளிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
1974 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந உ.

4-44—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

### யட்டியாந்தோட்டை பட்டினம்

பட்டினசபைகள் கட்டளைச்சட்டம்

1975 க்கான ஆதனவரி

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச்சட்டத்தின் 159 (1) ம் பிரிவின்கீழ், அப்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் வழங்கிய அங்கீகாரத்துடனும், விசேட ஆணையாளரினால் விதிக்கப்படக்கூடியனவாய வரையறைகளுக்கும், தகைமைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் யட்டியாந்தோட்டைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நிலையான ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஒன்பது வீதமானதும் முறையே மார்ச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் நான்கு தவணைகளில் சமதொகைகளாக செலுத்தப்படற்பாலதுமான ஒரு வரியை 1975 ம் ஆண்டுக்கு யட்டியாந்தோட்டைப் பட்டினத்தின் விசேட ஆணையாளர் விதித்திருக்கிறாரென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 03 ந உ.

4-36—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமான இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசத்தாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

### மன்னார் பட்டினம்

#### களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் மன்னார் பட்டின விசேட ஆணையாளரினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டுடலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால் அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகிறது.

#### தீர்மானம்

மன்னார் பட்டின நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச்சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் 1957 திசெம்பர் 5 இன் 9806 இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானத்தினால் அத்தகைய கொடுப்பனவு சம்பந்தமாக விதித்து அறவிடப்பட்ட வரிக்குப் பதிலாக இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு வரியை இத்தீர்மானம் கசெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து மன்னார் பட்டின விசேட ஆணையாளர் இத்தால் விதித்து அறவிடுகின்றார்.

#### கட்டணத் தொகை

| வரித்தொகை நீங்கலாக அனுமதிக் கட்டணம் | வரி விகிதம் ரூ. ச. |
|---|---|
| (1) 20 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 40 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 05 |
| (2) 40 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 90 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 10 |
| (3) 90 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 40 சதத்துக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 20 |
| (4) 1 ரூபா 40 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1 ரூபா 90 சதத்துக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 30 |
| (5) 1 ரூபா 90 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 3 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. .. | 0 40 |
| (6) 3 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 60 |
| (7) 4 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 0 80 |
| (8) 5 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10 ரூபாவுக்கு மேற்படாமலிருக்குமிடத்து .. .. .. | 1 00 |
| (9) 10 ரூபாவுக்கு மேற்படுமிடத்து :— | |
| (i) முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1 00 |
| (ii) ஒவ்வொரு மேலதிக 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. .. .. | 1 00 |

டீ. இராஜேந்திரா,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாக உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு
1975 ம் ஆப் மார்ச் மீ 19 ந உ.

4—37—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## பதவிகள் — வெற்றிடம்

"இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"யின் VI ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும். உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்.

படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விகிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

2. சேவைகள் நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

3. நியமன விதிகள்.—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவர். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால் அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச் சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள், விடயத்தில் அவர்கள் கடைசியாக இளைப்பாறும்போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்ககும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறாயினும் பெண்களும் 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட, 1952 ம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சி மன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கும் ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு ஆயை வானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றிச் சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசிய மற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலை வரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்வி பயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத்- தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு (1).—சிங்களமொழி மூலம் உள்ளூராட்சிச் சேவையில் புகும் தகைமை பெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு (2).—இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு (3).—4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதுகளிலிருந்து கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித் தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படை வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.—இரு வருட தொடர்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்கள் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைத் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தேர்ந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குச் தகைமையின்மையை உண்டாகும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகி விட்டதோ என்ற குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலிற் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர்,

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யு முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றனர். விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பகாரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சன்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

**...............(...................) பதவிக்கான விண்ணப்பம்**

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :———.

(ஆ) ..........................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :———.
தேசிய இனம் :———.
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா? இலங்கையரல்லாதவரா? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் :———.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதி சரியான வயது :
———வருடங்கள். ———மாதங்கள். ——— நாட்கள்.

(ஆ) பிறந்த திகதி :
வருடம்.———. மாதம்.———. திகதி.———

5. பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பகாரர் :———.

(ஆ) அவரது பிதா.———.

(இ) அவரது பிதாவழிப் பாட்டன் :———.

(ஈ) அவரது பிதாவழிப் பூட்டன் :———.
(விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்.)

6. விவாகமானவரா? தனியாளரா? அல்லது தாரமிழந்தவரா? கைம்பெண்ணா? .———.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :—

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1............ | ......... | ...... | 1............ | ......... | ...... |
| 2............ | ......... | ...... | 2............ | ......... | ...... |
| 3............ | ......... | ...... | 3............ | ......... | ...... |
| 4............ | ......... | ...... | 4............ | ......... | ...... |
| 5............ | ......... | ...... | 5............ | ......... | ...... |

8. கல்வித் தகைமைகள் :

(அ) சி. பா. த. பத்திரம்/க. பொ. த. ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

(ஆ) க. பொ. த. ப. (உயர்தரம்)

| பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|
| | | | | |

(இ) வேறு கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

(ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—
1. சிங்களம் :———.
2. தமிழ் :———.
3. ஆங்கிலம் :———.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :———.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/அனுபவங்கள் :—

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) :—

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக :———.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :———.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும :———.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :———.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? :———.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :———.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா ? —

(அ) சிங்களம் :———.

(ஆ) தமிழ் :———.

13. விசேட தகைமைகள்.—விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா? உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக :———.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக :———.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :———.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :———.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) :———.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :———.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

உள்ளூராட்சிச் சேவை

இயந்திரத்தொகுதி, சாதனம் தொடர்பான அத்தியட்சர் பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சி சேவைப் பணிப்பாளரால் கோரப்படுகின்றன.

2. வேதனக்கிரமம்.—இப்பதவிக்குரிய வேதனக் கிரமம் வருடாந்தம் ரூ. 6,600—8 × 180 ம் 5 × 240—ரூ. 9,240 வருடாந்தம் ரூ. 8,280 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. வேண்டிய தகைமைகள்—

(அ) வயது 23.05.1975 திகதியன்று 45 வயதிற்கு மேற்படக் கூடாது. (உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஊழியர்களுக்கு இவ் வயதெல்லை பொருந்தமாட்டாது).

(ஆ) விண்ணப்பதாரர்கள் சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(இ) ஒரு நன்கு மதிக்கப்பட்ட ஊர்திச்சாலையில் அல்லது வேலைத்தலத்தில் குறைந்தது 5 வருட தொழிற் பயிற்சி அனுபவம் இருத்தல் வேண்டும்.

(ஈ) தொழிற்பயிற்சியின் பின்னர், ஒரு ஊர்திச்சாலையின் கீழ்க் காணும் பகுதிகளில் ஒரு முகாமியாக 5 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் :—

(1) லொறிகளுக்கு பெரிய பழுதுபார்த்தல்கள் செய்யும் பகுதி ;
(2) மின்சாரப் பகுதி ;
(3) சிறிய பழுதுபார்த்தல்கள் செய்யும் பகுதி ;
(4) இயந்திரப்பகுதி ;
(5) கொல்லவேலைப் பகுதி ;
(6) நிறம்பூசும் பகுதி ;

(உ) களஞ்சிய முகாமையில் பொதுவான அறிவைப் பெற்றிருப்பதுடன், வாகனங்களுக்கு மாற்றுறுப்புகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாகவும் விரிவான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) விண்ணப்பதாரர்கள் லொறிகளுட்பட மோட்டார் வாகனங்களை ஓட்டுவதற்குரிய செல்லுபடியான திறமைச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 23.05.1975 ற்கு முன்னர் உ. ஆ. சே. பணிப்பாளருக்கு கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

6. அரசாங்க சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் கடமை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருந்து பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர் அல்லது உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர், தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்து சான்றுரைத்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. தகுதியுடைய பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் மாத்திரம் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படும்.

ஆர். அபேரத்ன,
உ. ஆ. சே. பணிப்பாளர்.

த. பெ. 530,
கொழும்பு 1,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 27 ந் உ.

4-107—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

உள்ளூராட்சிச் சேவை—பெறுபேறுகள்

உள்ளூராட்சிச்சேவை தரம் III சிறுப்பர்கள் காசாளர்கள் சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டு நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகளின்படி சிறப்புத் திறமைமுறைப் பிரகாரம் நியமனத்தின் பொருட்டுக் கீழ்க் காணும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

| சுட்டி லக்கம் | பெயர் | முகவரி |
|---|---|---|
| 06 .. | திரு. எஸ். கே. தர்மசேன | "ஜயந்த", பொத்துபிட்டிய, வாதுவ தெற்கு |
| 11 .. | செல்வி. எஸ். ஏ. ஜயந்தி .. | பக்மீகஹவத்த, யத்தெஹி முல்ல, உணவட்டுண, காலி |
| 10 .. | திரு. எம். டி. குணசோம .. | 19 ஆ, கைலகொட, வதுளை |
| 07 .. | திரு. எல். ஜே. ஏ. எல். டி. சில்வா | 329, பன்னலகெதர, வெயங்கொட |

ஆர். அபேரத்ன,
பணிப்பாளர்,
உள்ளூராட்சிச் சேவை.

த. பெ. 530,
லோங்டன் இடம்,
கொழும்பு 7,
1975 ம் ஆண்டு மார்ச் மீ 24 ந் உ.

4-110—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

தரம் I, II, III மின் அத்தியட்சர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையின் பெறுபேறுகள்—1974 ஆகஸ்ட் 3ம், 5ம் திகதிகள்

இப்பரீட்சையின் பெறுபேறுகள் கீழ்த் தரப்படுகின்றன :—

தரம் I வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

| சுட்டிலக்கம் | பெயர் | உள்ளூராட்சி மன்றம் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|---|
| 3. | *டபிள்யு. ஜி. பி. டபி. குணதிலக | டெஹிவல மா. ந. ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும் (72)<br>மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II (73) |

தரம் II, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

| சுட்டிலக்கம் | பெயர் | உள்ளூராட்சி மன்றம் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|---|
| 4. | *திரு. பி. ஜெயரட்ணசிங்கம் | ஹற்றன்—டிக்கோயா ந. ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும் (73)<br>மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II (73) |
| 5. | பி. காங்கேயநாதன் | அம்பாந்தோட்டை ந. ச. | மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II |
| 7. | *வி. நவரட்ணராஜா | கம்பஹா ந. ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும்<br>மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II |
| 8. | ஜி. எஸ். நகுலேஸ்வரன் | கடுகண்ணுவை ந.ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும்<br>மின்சார எந்திரவியல் I |
| 10. | *எஸ். பரமேஸ்வரன் | களுத்துறை ந. ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும்<br>மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II (73) |
| 11. | *சே. தியாகராஜா | ஜாஎல ந. ச. | திணைக்களத்து அமைப்பும் நிதியும்<br>மின்சார எந்திரவியல் I<br>மின்சார எந்திரவியல் II (73) |

தரம் III, வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

| சுட்டிலக்கம் | பெயர் | உள்ளூராட்சி மன்றம் | சித்தியடைந்த பாடங்கள் |
|---|---|---|---|
| 23. | ஜே. பி. தல்பதாது | கந்தானை ப. ச. | மின்சார எந்திரவியல் II |
| 27. | எம். டி. கே. குணதிலக | கலுகம்மன சியப்பத்து கி. ச. | மின்சார எந்திரவியல் II |
| 33. | கே. ஜயதிலக | வேருவல கி. ச. | மின்சார எந்திரவியல் II |
| 44. | எல். டி. புண்யசேன | கேகாலே ந. ச. | மின்சார எந்திரவியல் II |
| 48. | வி. ரெங்கநாதன் | அக்கரைப்பத்து கி. ச. மத்தி) | மின்சார எந்திரவியல் II |
| 49. | வி. சிவபாதசுந்தரம் | சாவகச்சேரி ந. ச. | மின்சார எந்திரவியல் II |

*வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை பூரணப்படுத்தியுள்ளார்.

ஆர். அபேரத்ன,
பணிப்பாளர்,
உ. ஆ. சே. திணைக்களம்.

த. பெ. 530,
கொழும்பு 1,
24.3.75.

4-111—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

உள்ளூராட்சிச் சேவை—பெறுபேறுகள்

உள்ளூராட்சிச்சேவை தரம் II களஞ்சியப் பொறுப்பாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பின் பொருட்டு 15.6.74 திகதியன்று நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளின்படி சிறப்புத் திறமைமுறைப் பிரகாரம் நியமனத்தின் பொருட்டு கீழ்க்காணும் பரீட்சார்த்திகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறியத்தரப்படுகிறது :—

| சுட்டிலக்கம் | பெயர் | முகவரி |
|---|---|---|
| 31 | எம். ஜி. பர்னுந்து | 37/2, பான்சல வீதி, களுத்துறை வடக்கு |
| 06 | பி. எச். தர்மதாஸ | 74/3, நில்வள வீதி, தோட்டமுன, மாத்தறை |

ஆர். அபயரத்ன,
பணிப்பாளர்,
உள்ளூராட்சிச் சேவை.

த. பெ. 530,
19, லோங்டன் இடம்,
கொழும்பு 1,
1975 ம் ஆண்டு மார்ச் மீ 24 ந் த.

4-112—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

# துணை விதிகள்

## பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டினசபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின்கீழ் அநுத்கமப் பட்டினசபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் த.

துணைவிதிகள்

மலகூடக் கட்டணம்

1. சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நியமத் துணைவிதிகளின் XIX ஆம் பாகத்தின் 6 ஆம் துணைவிதியின் நோக்கத்துக்கு சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படற்பாலதான மலகூடக் கட்டணம், 1975 சனவரி 1 ந் திகதியிலிருந்து, மலமகற்றப்படும் ஒவ்வொரு வாளிக்கும் ஐந்து ரூபா வீதமாகவிருத்தல் வேண்டும்.

2. 1 ஆம் துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம், அத்தகைய கட்டணம் செலுத்தப்படவேண்டியது சம்பந்தமான மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.

4-108—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

யாழ்ப்பாண மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 267, 272 என்னும் பிரிவுகளின்கீழ் யாழ்ப்பாண மாநகரசபையால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 12 ந் உ.

நடைகாரர் கடவைகள், வீதி நடைகள் தொடர்பான துணை விதிகள்

1. இத்துணை விதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"நடைகாரர் கடவை" என்பது தெரு எதன்மீதும் வர்ணக் கோடுகள் மூலம் அல்லது வேறு வகையாக அடையாளத்தால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கும் நடைகாரர்களுக்கான ஒரு கடக்கும் இடம் எனப் பொருள்படும்.

2. நடைகாரர் கடவையொன்றை அணுகும் ஒவ்வொரு ஊர்தியின் சாரதியும் தேவைப்படின் அத்தகைய கடவையை அடையுமுன்னதாக நிறுத்தவல்ல அத்தகைய வேகத்திலேயே செலுத்தல் வேண்டும்.

3. பொலிசுக் கொசத்தாப்புமாரால் அல்லது ஒளிச் சைகையால் அந்த நேரத்தில் போக்கு வரத்துக் கட்டுப்படுத்தப்படாதுள்ள ஒரு கடவையை அணுகும் ஒவ்வொரு ஊர்தியின் சாரதியும் நடைகாரர் கடவைமீதுள்ள நடைகாரர் எவருக்கும் தடையற்றதும் இடையீடில்லாததுமான வழியை அனுமதித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய கடவையில் அத்தகைய நடைகாரர் ஒவ்வொருவருக்கும் ஊர்திப் போக்கு வரவு அனைத்தையும்விட முன்னீடு இருத்தல் வேண்டும்.

4. (அ) தமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் செல்லவியலாது அவர் தடுக்கப்பட்டாலன்றி, அல்லது

(ஆ) ஒரு விபத்தைத் தவிர்ப்பதற்காக நிறுத்துதல் அவருக்கு அவசியமாக விருந்தாலன்றி

எந்த ஊர்தியின் சாரதியும் கடவை எதன் மீதும் அத்தகைய ஊர்தியை நிறுத்தலாகாது.

5. நடைகாரர் கடவை எதன் மீதும் நடைகாரர் எவரும் நியாயமான வேகத்துடன் தெருவின் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்துக்கு செல்லும் நோக்கத்துக்குத் தேவைப்படுவதை மேற்பட்டு அக்கடவையில் தங்குதலாகாது.

6. தெருவழியாக நடந்துசெல்லும் நடைகாரர் எவரும் வீதிநடை அல்லது அடிப்பாதை ஏதுமிருப்பின் அதன் வழியாக அல்லது வீதிநடை அல்லது அடிப்பாதை எதுவுமில்லாதிருப்பின் அவர் நடந்து செல்லும் திசையில் தெருவின் வலதுபுறமாக நடந்து செல்லல் வேண்டும்.

7. இத்துணை விதிகளின் ஏற்பாடுகளில் எவற்றையேனும் மீறிச் செயற்படும் ஆள் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் ஆளாதல் வேண்டும்.

4–114—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

யாழ்ப்பாண மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச் சட்டம்

(252 ஆம் அத்தியயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 267,272 ஆகிய பிரிவுகளின்கீழ், யாழ்ப்பாண மாநகரசபையினால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ், அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டனவும், தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டனவுமான துணை விதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந் உ.

மீன் விற்பனை தொடர்பான துணைவிதிகள்

1. இத்துணைவிதிகளில், சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"சபை" என்பது யாழ்ப்பாண மாநகரசபை எனப்பொருள்படும்

"மாநகர முதல்வர்" என்பது யாழ்ப்பாண மாநகர சபையின் முதல்வர் எனப் பொருள்படும் ;

"மாநகரசபைப் பிரதேசம்" என்பது மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாநகரசபைப் பிரதேசமென வெளிப்படுத்தப்பட்ட இடப்பரப்பெனப் பொருள்படும்.

"உரிமம் பெற்றவர்" என்பது இத்துணைவிதிகளைப் பின்பற்றி மீன் விற்பதற்கு, எவையேனும் வளவுகளை அல்லது இடம் எதனையும் உபயோகிக்க அதிகாரமளித்து மாநகர முதல்வரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றை வைத்திருக்கும் ஆள் எனப் பொருள்படும்.

"உரிமம் பெற்ற வளவுகள்" என்பது மாநகர முதல்வரால் உரிமம் வழங்கப்பட்டுள்ள வளவுகள் அல்லது இடம் முழுவதுமெனப் பொருள்படும்.

2. (அ) காலத்துக்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய கட்டணத்தைக் கொடுப்பதன்மேல் மாநகர முதல்வரால் அதன் சார்பில் வழங்கப்படும் ஓர் உரிமத்தின் மீதன்றி, மீன் விற்பனைக்கு (ஒரு பகிரங்கச் சந்தை தவிர்ந்த) கடை அல்லது இடம் எதையும் ஆளெவரும் உபயோகித்தலாகாது.

(ஆ) இத்துணைவிதியின்கீழ் வழங்கப்படும் உரிமம் ஒவ்வொன்றும், துணைவிதி 7 இன் கீழ் முன்னதாக நீக்கப்பட்டால் அல்லாது அது வழங்கப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 ம் நாளில் முடிவுறுதல் வேண்டும்.

3. உரிமம் பெறப்படவுள்ள வளவுகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்திருந்தால் அல்லாது, மீன் கடை ஒன்றை வைத்திருப்பதற்கான ஓர் உரிமத்தைப் பெறுவதற்கு ஆள் எவரும் உரித்துடையராதலாகாது :—

(அ) வளவுகள் நன்கு பழுதுபார்க்கப்பட்டனவாகவும், நல்ல காற்றோட்டம் உடையனதவாகவும் நன்றாக வெளிச்சமூட்டப்பட்டவையாகவும் இருத்தல்வேண்டும் என்பதுடன் அறை ஒவ்வொன்றுக்கும் திறக்கப்படக்கூடியவையான யன்னல்கள் ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும் ; ஒவ்வொரு யன்னலும் திறந்திருக்கையில் அதன் பரப்பளவு, வெளிமட்டமான தள இடத்தின் பதினைந்தில் ஒன்றுக்குக் குறைவுபடாததாகவிருத்தல் வேண்டும் ;

(ஆ) ஒவ்வொரு பகுதியிலுமுள்ள ஒவ்வோர் அறையிலும் சுவர்கள் 7 அடிக்குக் குறைவுபடாத உயரமுடையனவாகவும், பளிங்குக் கல்லால் நிரப்பப்பட்ட அல்லது சீமேந்தால் பூசப்பட்ட அப்பேற்பட்ட பகுதிகள் புறநீங்கலாக, சுண்ணாம்பால் பூசப்பட்டும், சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப்பட்டும் இருத்தல் வேண்டும் ;

(இ) தாழ்வாரங்கள் யாவும் நிலத்தில் இருந்து 6 அடிக்குக் குறைவாக இருத்தலாகாது ;

(ஈ) மரவேலைகள் எண்ணெய் வண்ணம் பூசப்பட்டு அல்லது சுண்ணாம்பால் வெள்ளையடிக்கப்பட்டு இருத்தல் வேண்டும் ;

(உ) தளமானது, சீமேந்தில் கட்டப்பட்டு சீமேந்தால் பூசப்பட்டு ஒரு வாளியினுள் சென்றுவிழும் கட்டுவேலை செய்யப்பட்ட ஒரு வடிகாலுக்கு இட்டுச் செல்லுவதான ஏற்ற சரிவுடைய அழுத்தமான சீமேந்தினால் அமைக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும் ;

(ஊ) மீன் வைக்கப்படும் மேசை ஒவ்வொன்றும் நாகத்தால் அல்லது உட்செறிய விடாப் பொருளால் மூடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(எ) வளவுகளில் சுகாதாரமுறையான குப்பைத்தொட்டியொன்றும் போதிய மலகூட இடவசதியும் ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

(ஏ) வளவுகளானவை, மலகூடம், கழிவுநீர்க்குழி, பசளைக் குவியல் அல்லது திறந்த கழிவுப் பொருள் குழாய் எதிலிருந்தும் ஆகக் குறைந்தபட்சம் 50 அடிக்கு அப்பால் இருத்தல் வேண்டும்.

(ஐ) கழிவுநீர்க் குழி, மலகூடம் அல்லது சாம்பற்குழி எதுவும் அவ்வளவுகளினுள் அல்லது அதனோடு நேரடியாகத் தொடர்புபட இருத்தலாகாது.

4. (அ) தமிழிலும், சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் தமது பெயருடன் "உரிமம்பெற்ற மீன் கடை" என்ற சொற்கள் அதன்மீது தெளிவாக வர்ணத்தால் தீட்டப்பட்ட பலகை ஒன்றை மீன்கடை ஒன்றிற்கான உரிமம்பெற்ற ஒவ்வொருவரும் தமது வளவுகளின் வெளிப்பக்கமாக ஒரு துலக்கமான இடத்தில் பதித்து வைத்திருத்தல் வேண்டும்.

(ஆ) மீன் கடை ஒன்றிற்கு உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும், தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மீன் கடைகள் தொடர்பான இவ்வொழுங்கு விதிகளின் பிரதி ஒன்றைச் சட்டமிடச்செய்து உரிமம் பெற்ற வளவுகளின் முக்கியமான ஓர் இடத்தில் வைப்பித்தல் வேண்டும்

மீன் விற்போர் உட்பட எல்லா ஊழியர்களது பெயர்களையும், முகவரிகளையும் கொண்ட நிரல் ஒன்றையும், அவ்வளவுகளில் சோதனைக்கு எல்லா நேரங்களிலும் கிடைக்கப்பெறக்கூடியதாக அவர் வைத்திருத்தல் வேண்டும்.

(இ) மீன் கடை ஒன்றிற்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், மீன் கடையின் பாகமாக அமையும் ஒவ்வோர் அறையினதும் மெருகிட்ட ஓடுகளால் மூடப்பட்ட அல்லது சீமேந்தினால் பூசப்பட்ட சுவர்களின் அப்பேற்பட்ட பகுதிகள் புறநீங்கலான ஏனைய பகுதிகட்குச் சுண்ணம்பு வெள்ளை அடிப்பிக்கவும் எல்லா மரவேலைகளுக்கும் சுண்ணம்பு வெள்ளை அடிப்பிக்கவும் அல்லது அவை எண்ணெய் வண்ணம் பூசப்பட்டனவாயிருந்தால், குறைந்தபட்சம் ஓராண்டில் நாலு தடவைகளாவது மார்ச்சு, யூன், செப்டெம்பர், திசெம்பர் ஆகிய மாதங்களிலும் மாநகர முதல்வரால் எழுத்துமூலம் கட்டளையிடப்படும் அத்தகைய ஏனைய நேரங்களிலும் அச்சுவர்களை வெந்நீராலும் சவர்க்காரத்தாலும் கழுவுவித்தலும் வேண்டும்.

(ஈ) மீன் கடை ஒன்றுக்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், தளம், ஓடு பதித்த அல்லது சீமேந்திடப்பட்ட சுவர்களது பாகங்கள், மேசைகளின் மேற்பக்கங்கள், வெட்டுக் குத்திகள் என்பனவற்றை ஒவ்வொரு நாளும் ஒரு தடவை உரைஞ்சிக் கழுவுவித்தல் வேண்டும் என்பதுடன், மீனைத் தூக்குவதற்கான கொழுவிகளை மினுக்கமாயும் கறள் பிடியாமலும் வைத்திருத்தலும் வேண்டும்.

(உ) ஒரு மீன் கடைக்கு உரிமம் பெற்ற ஒவ்வொருவரும், அக்கடையின் ஒவ்வொரு பாகத்தையும் அதன் சுற்றுடல்களையும், வடிகால்களையும், தளவாடங்களையும், மீனைச் சேகரித்து வைத்தல், ஆயத்தப்படுத்தல் அல்லது விற்றல் தொடர்பாக உபயோகிக்கப்படும் கொள்கலன்களையும் சாதனங்களையும் பழுதடையாமலும், / சுத்தமாகவும் வடிகாலில், மலகூடத்தால், கழிவுநீர்க் குழியால் அல்லது வேறு வழியால் வெளிப்படுகிற கெட்ட நாற்றம் அணுகாமலும் வைத்திருத்தல் வேண்டும்.

(ஊ) மீன் கடை ஒன்றிற்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும் ஒரு சுகாதார முறையான குப்பைத்தொட்டியையும், அவ்வளவுகளில் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளோர் இலகுவில் சென்றடையக்கூடியதான இடத்தில் ஒன்றுக்குக் குறையாத படிக்கத்தையும் அவ்வுரிமம்பெற்ற வளவுகளில் வைப்பித்தல் வேண்டும்.

(எ) மீன் கடை ஒன்றிற்கு உரிமம் பெற்றவர் ஒவ்வொருவரும், வியாபார, வீட்டுக் குப்பைக்கூளங்களை, உடனுக்குடன் கசிவற்றதும் மூடப்பட்டதுமான ஒரு கொள்கலனில் போடுவிக்கவும், நாள்தோறும் உரிமம் பெற்ற இடத்திலிருந்து அப்புறப்படுத்துவிக்கவும் வேண்டும் என்பதுடன், உள்ளபடி குப்பைபோடும்போது அல்லது குப்பை அகற்றும்போது அல்லாது ஏனைய நேரங்களில், அவர் சொல்லப்பட்ட கொள்கலன் எப்போதும் மூடப்பட்டதாக இருக்கச்செய்தலும் வேண்டும்.

(ஏ) மீன் கடை ஒன்றுக்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், உரிமம் பெற்ற வளவுகளில் எலிகள் இல்லாது காத்தல் வேண்டுமென்பதுடன், எலிப்பொந்துகள் யாவற்றையும் கண்டுகொண்டதும் உடனடியாக உடைந்த கண்ணாடியால் அவற்றை நிரப்பிச் சீமேந்தினால் பூசிவிடலும் வேண்டும்.

(ஐ) உரிமம்பெற்ற வளவுகளில் ஆள் எவரும் எந்த நிபந்தனையின் கீழும் விலங்கு அல்லது பறவை எதனையும் வைத்திருக்கலாகாது.

(ஒ) அந்த நோக்கத்துக்கென வைக்கப்பட்டிருக்கும் படிக்கத்தில் அல்லாது, ஆள் எவரும் ஒரு மீன் கடைக்குள் துப்புதலாகாது.

(ஓ) தொற்று, தொடு அல்லது தேரிலப்பற்றிய நோய்களினால் பீடிக்கப்படும் அல்லது சமீபகாலத்தில் பீடிக்கப்பட்டுள்ள அல்லது அப்பேற்பட்ட நோயால் பீடிக்கப்பட்ட ஆட்களுக்குச் சமீபத்தில் பணிவிடை செய்த ஆள் எவரும், ஒரு மீன் கடையினுள் நுழைய அல்லது அங்குள்ள மீனைப் பதப்படுத்தலில், ஆயத்தப்படுத்தலில் அல்லது விற்பனை செய்தலில் அல்லது மீனை அங்கு அல்லது அங்கிருந்து கொண்டு செல்வதில் பங்கு பற்றுதலாகாது.

(ஔ) உரிமம்பெற்ற வளவுகளில் ஆள் எவரும், மீனைச் சேகரித்தல், ஆயத்தப்படுத்தல் அல்லது விற்பனைசெய்தல் நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படுவனவல்லாத தளபாடங்களை, துணிகளை, படுக்கும் பாய்களை அல்லது வேறு பொருள்களை வைத்திருத்தலாகாது.

(க) தளத்தில் இருந்து பாவுபலகை வரை நீண்டிருக்கும் ஒரு பிரிவிடுதலால், மீன் கடையிலிருந்து பயனுறப் பிரிவிடப்பட்டிருந்தால் அல்லாது, அத்துடன் அப்பேற்பட்ட உறங்கும் இடத்துக்கு, திறந்திருக்கும்போது, வெளிமட்டத்தள இடத்தின் பதினைந்தில் ஒரு பகுதிக்குக் குறைவுபடாத பரப்பை உடையதான ஒரு வெளி யன்னல் ஏற்படுத்தப்பட்டும் இருந்தால் அல்லாது, மீன் கடையுடன் அதே மட்டத்திலும், அதே கட்டிடத்தின் பாகமாகவும் அமையும் எந்த இடத்தையும் ஓர் உறங்கும் இடமாக உபயோகிப்பதற்கு ஒரு மீன் கடைக்கு உரிமம் பெற்ற ஒருவரும் அனுமதித்தலாகாது.

(ங) ஒரு மீன் கடைக்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், உரிமம்பெற்ற வளவுகளில் போதிய குடிநீரை வைத்திருத்தல் வேண்டும்.

(ச) ஒரு மீன் கடைக்கு உரிமம்பெற்ற ஒவ்வொருவரும், உரிமம்பெற்ற வளவுகளை, மீன் விற்பனைக்கு ஒவ்வொரு நாளும் திறந்து வைத்திருத்தல் வேண்டும்.

(ஞ) உரிமம்பெற்ற ஒருவரும் ஒரு மீன் கடைக்கு மாநகர முதல்வரும் மீன்கடைக்கு உருமம்பெற்றவரும் கையொப்பம் இட்டுள்ள ஒரு பதிவு அட்டையை எவரேனும் ஆள் வைத்திருந்தால் அல்லாது, அத்தகைய ஆளைத் தமது உரிமம்பெற்ற வளவிலிருந்து விற்பனைக்கு மீனைக் கொண்டுசெல்ல அனுமதித்தலாகாது.

(ட) ஒரு மூடப்பட்ட ஊர்தியில் அல்லது மூடப்பட்ட கூடையில், தகரத்தில் அல்லது ஏனைய பொருத்தமான கொள்கலனில் அல்லாது, மீன் எதனையும் தமது உரிமம்பெற்ற வளவிலிருந்து விற்பனைக்குக் கொண்டுசெல்ல ஆள் எவரையும், ஒரு மீன் கடைக்கு உரிமம்பெற்ற ஒருவரும் அனுமதித்தலாகாது. அப்பேற்பட்ட ஊர்தி, கூடை, தகரம் அல்லது ஏனைய கொள்கலன் ஒவ்வொன்றும், எல்லா நேரங்களிலும் சுத்தமாக வைத்திருக்கப்படச் செய்தல் வேண்டும்.

(ண) ஒரு மீன் கடையின் உரிமம்பெற்றவரால் தமக்கு விண்ணப்பிக்கப்பட்டதன் மீது, மீனை விற்பனைக்குக் கொண்டுசெல்வதில் அப்பேற்பட்ட உரிமம் பெற்றவரால் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆள் ஒவ்வொருவரதும் உபயோகத்துக்குப் பதிவு அட்டைகளை மாநகர முதல்வர் வழங்குதல் வேண்டும்.

(த) ஓடுள்ள மீனைத் தவிர்த்து, சாப்பிடுவதற்கான மீனை நிறுவையால் அல்லாது, உரிமம்பெற்றவர் ஒருவரும் விற்றலாகாது.

5. (அ) மாநகர முதல்வர் அல்லது சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அல்லது மாநகர முதல்வரால் அதற்குப் பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பெற்ற உத்தியோகத்தர் எவரும் எல்லா நியாயமான நேரங்களிலும், மீன் விற்பனைக்காக உபயோகிக்கப்படும் கடை அல்லது இடத்தில் நுழைவதும், பரிசோதனை செய்வதும் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(ஆ) மாநகர முதல்வரை அல்லது சுகாதார வைத்திய உத்தியோகத்தரை அல்லது மாநகர முதல்வரால் அதற்குப் பொதுவாக அல்லது சிறப்பாக எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பெற்ற உத்தியோகத்தர் எவரையும், உரிமம் பெற்றவர் அல்லது மீன் விற்பனைக்குரிய கடைக்கு அல்லது இடத்துக்குப் பொறுப்பாகவுள்ள ஆள் எவரும், அவ்வளவுகளில் நுழையவும், பரிசோதிக்கவும் அனுமதிக்க வேண்டுமென்பதுடன், மாநகர முதல்வருக்கு அல்லது அப்பேற்பட்ட உத்தியோகத்தருக்கு வேண்டப்படும் அப்பேற்பட்ட எல்லா உதவிகளையும் அளித்தலும் வேண வேண்டும்.

6. மீன் விற்பனை தொடர்பான இத்துணைவிதிகள் எதனதும் ஒவ்வொரு மீறுதலும் —

(i) முதல் குற்றமாகில், ஒரு நூறு ரூபாவுக்கு மேற்படாத ஒரு குற்றப் பணத்தால் ;

(ii) இரண்டாம் அல்லது அடுத்துவரும் குற்றமாகில், இருநூறு ரூபாவுக்கு அதிகப்படாத ஒரு குற்றப்பணத்தால் ; அத்துடன்

(iii) தொடர்ந்து புரியப்படும் குற்றமாகில், ஒரு குற்றத்தீர்ப்பின் பின் அல்லது அப்பேற்பட்ட மீறுதலுக்குக் கவனத்தை ஈர்த்து மாநகர முதல்வரிடமிருந்து எழுத்தில் ஓர் அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்டபின், குற்றம் தொடர்ந்து புரியப்பட்ட நாள் ஒவ்வொன்றுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு அதிகப்படாத ஒரு கூடுதலான குற்றப்பணத்தால் தண்டிக்கப்படத் தகுந்த குற்றமாதல் வேண்டும்.

7. மீன் விற்பனை தொடர்பான இத்துணை விதிகள் எதனையும் மீறியமைக்கு, அது விதிக்கக்கூடிய வேறு எந்தத் தண்டனைக்கும் கூடுதலாக, இரண்டு தடவை அல்லது அதிலும் அடிக்கடி குற்றத்தீர்ப்புப் பெற்ற உரிமம்பெற்றவர் ஒருவரின் உரிமத்தை நீக்குதல், தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள ஒரு நீதிமன்றத்துக்கு சட்டமுறையானதாதல் வேண்டுமென்பதுடன் நீக்குதல் தொடர்பில் உரிமம் பெற்றவர் நட்டஈடெதற்கும் உரித்துடையராதலுமாகாது.

8. இத்துணைவிதிகளின் கீழான அறிவித்தல் எதுவும் உரிமம் பெற்றவரின் வழமையான தொழில் இடத்துக்குப் பதிவு அஞ்சலில் அது அனுப்பப்பட்டிருப்பின், அல்லது உரிமம் பெற்றவர் தமது தொழிலை நடத்தும் வளவுகளில் அது ஒட்டப்பட்டிருப்பின் அல்லது அப்பேற்பட்ட இடம் எதிலும் உரிமம் பெற்றவரால் தொழிலுக்கமர்த்தப்பட்டிருக்கும் ஆள் எவரிடத்தும் அது விடப்பட்டிருப்பின் உரிமம் பெற்றவருக்கு வழங்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

4–115—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

எல்.டி.பி. 74/50.

யாழ்ப்பாண மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச்சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 267,272 என்னும் பிரிவுகளின்கீழ், யாழ்ப்பாண மாநகரசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச்சட்டத்தின் 268 ம் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும், தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்டதுமான துணைவிதிகள்.

உ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 1975 ம் ஆண்டு மார்ச் மீ 13 ந் உ.

நீர் விநியோகம் தொடர்பான துணைவிதிகள்

1. இந்தத் துணைவிதிகளில்—

" ஆணையாளர் " என்பது சபையின் ஆணையாளர் எனப் பொருள்படும்.

" சபை " என்பது யாழ்ப்பாண மாநகரசபை எனப் பொருள்படும்.

" வீட்டுத் தேவை " என நீர் விநியோகம் தொடர்பில் உபயோகிக்கப்படுவது, விற்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்காக குதிரைகள், ஆடுமாடுகள் அல்லது வாகனங்கள் வைத்திருக்கப்படும் இடங்களில் அத்தகைய குதிரைகளை ஆடுமாடுகளை அல்லது வாகனங்களைக் கழுவுவதற்கு அல்லது வியாபாரத்துக்கு, உற்பத்தித் தேவைக்கு அல்லது தொழிலுக்கு அல்லது நீரூற்றுக்களுக்கு அல்லது நீச்சல் தடாகங்களுக்கு அல்லது ஏதேனும் அலங்கார அல்லது பொறியியல் தேவைகளுக்கு அல்லது நீர்ப் பாய்ச்சல் அல்லது ஏதேனும் கட்டிடம் அல்லது அத்துடன் தெரு அமைப்பதற்குத் தேவையான நீரை உள்ளடக்காது.

" கட்டளைச்சட்டம் " என்பது (252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டம் எனப் பொருள்படும்.

2. பொது நிலையக் குழாய்களில் அல்லது நீரூற்றுக்களில் அல்லது தனியார் சேவைக் குழாயிலிருந்து அல்லது இத்துணைவிதிகளால் விதிக்கப்பட்ட விதத்தில் அல்லாத வேறு வகையில் சபையின் நீர்வேலைகளிலிருந்து நீர் எடுத்தலாகாது.

3. (1) முன்னரே ஆணையாளரது எழுத்திலான அநுமதி பெற்றிருந்தாலன்றி, கையினால் தூக்கிச்செல்லப்படும் அல்லது தூக்கிச் செல்லத்தக்க ஒரு பாத்திரமல்லாத எதிலும் ஒரு பொது நிலையக் குழாயிலிருந்து எவரேனும் நீர் எடுத்தலாகாது.

(2) நீரை வீணக்கக்கூடிய எந்த அளவிலும் அல்லது எந்த விதத்திலும் பொது நிலையக்குழாயிலிருந்து எவரும் நீர் எடுத்தலாகாது.

4. எவரும் நிலையக்குழாய் எதிலும் நெளிகுழாய், குழாய், குழல், தகடு அல்லது ஏனைய எவ்வகையான உபாயத்தையும் ஒன்றில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ பொருத்தக்கூடாது.

5. எவரும் பொது நிலையக்குழாய் எதிலும் பொருத்தப்பட்டுள்ள அல்லது பொது நிலையக்குழாய் எதனதும் பாகமாயுள்ள தன்னியக்க அடைக்கும் கவாடம் அல்லது ஏனைய தன்னியக்கக் கருவியில், அக்கவாடத்தின் அல்லது கருவியின் தன்னியக்கத்தை ஒன்றில் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ தடைப்படுத்தும் விதத்தில் தலையிடக் கூடாது.

6. வீட்டுத்தேவையல்லாத வேறு எந்தத் தேவைக்கும் பொது நிலையக்குழாயிலிருந்து எவரும் நீர் எடுக்கக்கூடாது.

7. ஒட்டுநோய் அல்லது தொற்றுநோய் எதனாலும் பீடிக்கப்பட்டிருக்கும் எவரும் அல்லது அத்தகைய பேர் எவருக்கும் சமீபத்தில் தொண்டுபுரிந்த எவரும் பொது நிலையக்குழாயிலிருந்து நீர் எடுத்தலாகாது.

8. சபைக்குச் சொந்தமான அல்லது தற்போதைக்கு அதற்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அல்லது அதனால் பராமரிக்கப்படும் குளம், நிலையக்குழாய், நீரூற்று, தொட்டி, குழாய் அல்லது பிற நீர்வேலைகள் எதிலும் அல்லது அதற்கு அருகாமையிலும் எவரும் குளிக்க அல்லது தமது உடலின் எப்பாகத்தையேனும் கழுவ அல்லது எந்த மிருகத்தையும் அல்லது எந்த வாகனத்தையும், துணிகளை, பாத்திரங்களை அல்லது ஏனைய பொருட்கள் யாதொன்றையேனும் கழுவக்கூடாது.

தனியார் சேவைக்கான தேவைகள்

9. எவரும் ஒரு புதிய தனியார் நீர்ச் சேவையை அமைத்தலை அல்லது தற்போதுள்ள சேவைக்குழாய் எதனையும் மாற்றுதலை, நீடித்தலை, துப்புரவாக்குதலை அல்லது புதுப்பித்தலை—

(அ) இதன் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள " அ " என்னும் படிவத்தில் ஆணையாளரிடம் அதன் சார்பாக விண்ணப்பித்து ஆணையாளரின் எழுத்திலான அனுமதியைப் பெற்றிருந்தால் அல்லாது ;

(ஆ) அத்தகைய அமைப்பு, துப்பரவாக்கல் அல்லது புதுப்பித்தல் தொடர்பில் அதன்சார்பாக ஆணையாளரது அல்லது ஆணையாளரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பேர் எவரதும் எழுத்திலான அறிவுறுத்துரைகளுக்கு இணங்கியதாயிருந்தால் அல்லாது ;

(இ) அத்தகைய அமைப்பில், நீடிப்பில் அல்லது புதுப்பித்தலில் உபயோகிக்கப்படவிருக்கும் பொருத்திகள், சாதனங்களுக்கு ஆணையாளர் அங்கீகாரம் அளித்திருந்தால் அல்லாது ;

செய்தலாகாது.

நீர் விநியோகத் திட்டம்

10. சபையால் ஒரே ஆதனமாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளவையும் ஒரே முற்றத்துக்குள்ளிருப்பனவுமான எந்த இடங்களுக்கும் நீர் விநியோகிக்க சபையின் மூலக்குழாய்களிலிருந்து அல்லது நீருதவுதேவலைகளிலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட சேவைக் குழாய்கள் இணைக்கப்படலாகாது.

11. (1) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் குழாய்கள் யாவும் பிற்றுமின்சேர்க்கை பூசப்பட்ட வார்ப்பிரும்பால், நாகம்பூசிய தேனிரும்பாய், பொலிதீனால் அல்லது பொலினினில் குளோரைற்றால் ஆனவையாக விருக்கவேண்டுமென்பதோடு, இதன் பின்னர் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய தடிப்பமும், தரமும், வலுவும் உடையனவாகவுமிருக்கவேண்டுமென்பதோடு, மாநகர ஆணையாளரால் அல்லது அவர் சார்பில் ஆணையாளரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகவும் இருத்தல்வேண்டும்.

(2) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் நாகம் பூசிய தேனிரும்புக் குழாய்கள் யாவும், திருகுமூட்டுக்களும், குழிமூட்டுக்களும் உடையனவாகவும், 200 இருத்தல் சதுர அங்குல அமுக்கம் உடையனவாகவும், பிரித்தானிய நியமமான 1387 : 1967, இடைத்தன்மையிலான குழாய்களுக்கு இசைந்தனவாகவும், பின்வரும் நிறைகளுக்கு இணங்கியதாயும் இருத்தல் வேண்டும் :—

| | |
|---|---|
| 3/8" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 64 இரு. |
| ½" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 88 இரு. |
| ¾" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 125 இரு. |
| 1" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 181 இரு. |
| 1¼" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 256 இரு. |
| 1½" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 320 இரு. |
| 2" | உள்விட்டம், ஒவ்வொரு 100 நீளடிக்கும் 405 இரு. |

(3) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் வார்ப்பிரும்புக் குழாய்கள் யாவும் பிரித்தானிய நியமமான 1211 : 1958 க்கு இசைந்தனவாகவும், ஈயத்தாலும், நூலாலும் அல்லது றைற்றன் மூட்டுக்களை ஒத்த இறப்பர் மூட்டுக்களாலும் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(4) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் பொலித்தீன் குழாய்கள் யாவும் (குளிர்நீர்ச் சேவைக்கான அடர்த்தி குறைந்த பொலித்தீன் குழல்களுக்கான) பிரித்தானிய நியமமான 1972 : 1967க்கு இசைந்தனவாகவும், 100 பாகை பாரனைற்று வெப்பத்திலும் ஆகத்தாழ்ந்தது 150 அடி தொழிற்பாட்டு அமுக்கத்துக்குத் தகுந்ததாகவும் மற்றும் மிகக் குறைந்த தடிப்பம் கீழ்த் தரப்பட்டனவைகளாகவுமிருத்தல் வேண்டும் :—

| நியம துளை அங்குலத்தில் | மிகக் குறைந்த சுவர்த்தடிப்பம் (மில்லிமீட்டர்) | (அங்குலங்கள்) |
|---|---|---|
| 3/8" | 2·2 | (0·087) |
| ½" | 2·7 | (0·106) |
| ¾" | 2·3 | (0·091) |
| 1" | 3·0 | (0·118) |
| 1¼" | 3·7 | (0·146) |
| 1½" | 4·3 | (0·109) |
| 2" | 5·3 | (0·209) |

(5) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் உபயோகிக்கப்படும் பொலித்தீன் குளோறைட் குழாய்கள் யாவும் பிரித்தானிய நியமமான 3505 : 1968 அல்லது ஜப்பானிய கைத்தொழில் நியமங்கள் கே. 6742 : 1964 மற்றும் கே. 6741 : 1965 அல்லது இலங்கை நியமங்கள் பணியகத்தின் நியமங்களுக்கு இசைந்தனவாகவும், 100 பாகை பாரனேற்று வெப்பத்திலும் ஆகத்தாழ்ந்தது 150 அடி தொழிற்பாட்டு அமுக்கத் துக்குத் தகுந்ததாகவும், மற்றும் மிகக் குறைந்த தடிப்பம் கீழ்த் தரப்பட்டனவைகளாகவும் இருத்தல் வேண்டும் :

| நியம அங்குலத்தில் | | மிகக் குறைந்தசு வர்த்தடிப்பம் (மில்லிமீற்றர்) | | (அங்குலம்) |
|---|---|---|---|---|
| 3/8" | ... | 1.5 | .. | (0·059) |
| ½" | ... | 1·7 | .. | (0·067) |
| ¾" | ... | 1·9 | .. | (0·075) |
| 1" | ... | 2·2 | .. | (0·087) |
| 1¼" | ... | 2·2 | .. | (0·087) |
| 1½" | ... | 2·5 | .. | (0·098) |
| 2" | ... | 2·5 | .. | (0·098) |

12. (அ) சபையின் நீருதவு வேலைகளுடன் இணைக்கப்படும் தனியார் நீர்ச்சேவை எதனதும் நீர்க்குழாய்களுக்கு இடைப்படும், அல்லது குழாய் களுக்கும், உபகரணங்களுக்கும், பொருத்திகளுக்கும் இடைப்படும் மூட் டுக்கள் சகலமும் மினமுறையினாலேயே இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) மிடைபாயாமல் காப்பிடும் பயனுள்ள இணைக்கும் பொருட்கள் எதனையும், எந்தமூட்டிலும் உட்புகுத்தலாகாதெனினும், ஆணையாள ரின் கருத்துப்படி அத்தகைய பொருளின் உபயோகம் தவிர்க் கக்கூடாததாகவிருந்தால், மூட்டு அல்லது மூட்டுக்கள் மேலாக குழாய்கள் அல்லது பொருத்திகள் மினமுறையால் இணைக்கப்பட வேண்டுமென்ற நிபந்தனைமீது, அதன் உபயோகத்தை அவர் அனுமதிக்கலாம்.

13. நீராடுந்தொட்டி, மலகூட வட்டகை அல்லது அளறு ஒவ்வொன் றினதும் நுழைவாயில், வெளியேகும் வழியிலிருந்து புறம்பாகவும் முற்றிலும் வேறாகவும், நுழைவாயில் அத்தகைய நீராடுந்தொட்டி, மலகூட வட்டகை அல்லது அளறின் உச்சியில் அல்லது அதற்கு மேலாக அமையவும் வேண்டும்.

14. அத்தகைய தொட்டியின் ஆகக்கூடிய நீர்மட்டத்துக்கு மேற்பட அதன் நீரின் வெளியோட்ட மட்டம் இருக்கும்படியாக ஒவ்வொரு தொட் டிக்குமான நுழைவாயில் அல்லது விநியோகக்குழாய் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

15. (1) தனியார் நீர்ச்சேவை எதனதும் அமைப்பில் மாற்றம் அல்லது நீடிப்புக்களுக்கான செல்வை விண்ணப்பகாரரே பொறுத்தல் வேண்டும்.

(2) தனியார் நீர்ச்சேவை எதற்குமுரிய குழாய்கள், பொருத்திகள் யாவும் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரால் இடப்படவும், ஆக்கப்படவும் வேண்டுமென்பதுடன், ஆணையாளரின் அல்லது ஆணையாளரால அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரது திருப்திக்கு ஏற்றவாறும் செய்யப்படல்வேண்டும்.

16. எந்த ஆளேனும்—

(அ) ஒரு நீர்க்குழாய் தொழிலாளராக யாழ்ப்பான மாநகர சபையால் அவருக்கு வழங்கப்பட்ட உத்தரவுச்சீட்டு ஒன்றை அவர் வைத் திருக்கிறாரென்; அல்லது

(ஆ) இலங்கைத் தொழில் நுட்பக்கல்லூரியால் வழங்கப்பட்டதான நீர்க்குழாய்த் தொழிலில் ஒரு சான்றிதழை அவர் வைத் திருக்கிறாரென ; அல்லது

(இ) தனியார் நீர்ச்சேவைகளை அமைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பேர்களைக்கொண்ட ஏதாவது ஒரு குழுவின் விடயத்தில் அத்தகைய குழு தனது ஊழியத்தில் நீர் விநியோக வேலையில் நடைமுறை அனுபவமுள்ள சிவில் பொறியியலாளர் ஒருவரை அல்லது (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய ஆள் ஒருவரை வைத்திருக்கிறதென ;

ஆணையாளருக்குத் திருப்தியேற்படுத்தினல் அல்லாது 12 ஆம் ஆணைவிதி யின் நோக்கத்திற்கு நீர்க்குழாய்த் தொழிலாளராக அத்தகைய ஆள் அங்கீகரிக்கப்படலாகாது.

17. ஒவ்வொரு தனியார் நீர்ச்சேவைக்கும் ஆணையாளரால் அல்லது அவர் சார்பில் அவரது பிரதிநிதியால் அங்கீகாரமளிக்கப்பட்ட வகை யினதான திறமையான ஒரு குழாயடைப்பு ஏற்படுத்தப்படவும், அது அத்தகைய நீர்ச்சேவை ஏற்படுத்தப்பட்டுள்ள இடத்துக்கு இயன்ற அளவு சமீபமாகப் பொருத்தப்படவும் வேண்டும். அத்தகைய குழாயடைப்பை எல்லா நேரங்களிலும் அடையத்தக்க விதமாக அதற்கு ஒரு அறையை மூடியுடன் ஏற்படுத்தல்வேண்டும்.

18. புதிதாக அமைக்கப்பட்ட தனியார் நீர்ச்சேவையொன்றின் பாகமாயுள்ள குழாய்கள், கபாடங்கள் அல்லது ஏனைய பொருத்திகள் எதனையும், ஆணையாளர் அல்லது அதன் சார்பில் ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் பார்வையிடப்பட்டு எழுத்தில் அங்கீகரிக்கப்படும்வரை மூடக்கூடாது.

19. புதிதாக அமைக்கப்பட்ட தனியார் நீர்ச்சேவை ஒன்று, 18 ஆம் ஆணைவிதியின் கீழ், பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதன் பின், விண்ணப்பகாரர்—

(அ) ஆணையாளரால் மதிப்பிடப்பட்டபடி, தொழில், பொருட்கள், மற்றும் மேற்பார்வைச் செலவுகள் உட்பட, சேவையைச் சபை யின் மூலக் குழாயுடன் அல்லது நீர்வேலைகளுடன் இணைப்பதற் கான சேவை தொடர்பான செலவுத் தொகையையும் ;

(ஆ) இணைப்பு, நீர் விநியோகம் ஆகியவை சம்பந்தமாக ஒரு கட்டுப் பணம் அல்லது மேலதிக கட்டணம் ரூ. 50 ஐயும் ;

(இ) வசிப்பிட நோக்கங்கள் சம்பந்தமாக ரூ. 25 க்கும், வர்த்தக நோக்கங்கள் சம்பந்தமாக ரூ. 100 க்குமான ஒரு பிணைப் பணத்தையும் முறையே

சபையிடம் வைப்பிலிடவேண்டும்.

20. (1) சேவைக்குழாய் எதனையும், கழிவுப் பொருள்குழாய், வடிகால் அல்லது கழிவுநீர்க் குழி, அல்லது அதனோடு தொடர்புடைய ஆள் செல் துவாரம் எதனுள்ளும் அல்லது எதனூடாகவும் அல்லது உரக்கிடங்கு எதனுள்ளும் அல்லது எதனூடாகவும் செல்லும்படியாக அமைக்கப்படலாகாதென்பதுடன், தவிர்க்கவியலாதிருந்தால் அல்லாது, சேவைக்குழாய் எதனையும் அத்தகைய குழாய்க்கு அளவுகடந்த சீர்கேட்டை உண்டாக்கும் சாத்தியமுடைய அசுசியான மண் அல்லது பொருள் எதனூடாகவும் அமைத்தலோ அல்லது எதனையும் தொட்டுக் கொண்டிருக்க அனுமதித்தலோவாகாது.

(2) அத்தகைய குழாய் எதனையும் அசுசியான மண் அல்லது ஊறுவிளைவிக்கக்கூடிய பொருளினூடாக அமைத்தல் தவிர்க்க முடியாததாயிருக்குமிடத்து, ஆணையாளரால் அல்லது ஆணையாளரால் அதன்சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரால் அங் கீகாரமளிக்கப்பட்டதும், அரிக்கும்இயல்புக்கு எதிர்நிற்கக்கூடியதுமான வெளிக்குழல் அல்லது யாதாயினும் வேறு பொருத்தமான உபாயத்தி னூடாக அமைப்பதன்மூலம் அத்தகைய மண் அல்லது பொருளில் படாது குழாயைத் திறமையாகப் பாதுகாத்தல் வேண்டும்.

21. 19 ஆம் விதியில் குறிப்பிடப்பட்ட தொகைகள் முறையாக வைப்பிலிடப்பட்டால் அல்லாது, புதிதாக அமைக்கப்பட்ட தனியார் சேவை எதுவும் சபையின் மூலக்குழாயுடன் அல்லது நீர்வேலைகளுடன் இணைக்கப்படலாகாது. அத்தகைய தொகைகள் வைப்பிலிடப்பட்டதும், அத்தகைய தனியார் சேவைக்கு நீர் விநியோகத்தைச் சபை வழங்குதல் வேண்டும்.

22. தனியார் சேவை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ள இடம் எதற்குமான நீர் விநியோகம், சபையின் மூலக் குழாய்களோடு அல்லது நீர் வேலைகளோடு அத்தகைய சேவை இணைக்கப்பட்டபொழுதிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டதாகச் சகல நோக்கங்களுக்கும் கருதப்படல் வேண்டும்.

23. புதிதாக அமைக்கப்பட்ட தனியார் நீர்ச்சேவை ஒன்று சபையின் மூலக்குழாய்களோடு அல்லது நீர் வேலைகளுடன் இணைக்கப்பட்டபின்னர், அதன் தொடர்பில் உறப்பட்ட செலவுகளின் கணக்கு இதனோடுள்ள " ஆ " என்னும் அட்டவணையில் காட்டப்படும் படிவத்தில் விண்ணப் பகாரருக்கு ஆணையாளரால் வழங்கப்படல் வேண்டுமென்பதோடு இணைப்பைச் செய்வதற்காகச் செலவுசெய்யும் பொருட்டு விண்ணப் பகாரரால் வைப்பில் விடப்பட்டுள்ள தொகையில் செலவிடப்படாது எதும் மிஞ்சியிருந்தால் அது விண்ணப்பகாரருக்கு மீளளிக்கப்படல் வேண்டும். மெய்யான செலவு மதிப்பிட்ட செலவினும் மேம்படுமாயில். கணக்குக் கிடைக்கப்பெற்றதன் மீது, அத்தகைய மேலதிகத் தொகையை விண்ணப் பகாரர் சபைக்கு உடனடியாகச் செலுத்துதல் வேண்டும். அத்தகைய மேலதிகத் தொகை சபைக்குச் செலுத்தப்படாவிடத்து, அத்தகைய தனியார் சேவைக்கான நீர் விநியோகத்தை ஆணையாளர் நிறுத்திவிடலாம்.

24. (1) தனியார் சேவை ஒவ்வொன்றினதும் குழாயடைப்பும் நீர் மானியும் அத்தகைய குழாயடைப்புக்கும் சபையின் மூலக்குழாய் களுக்கும் இடைப்படவிருக்கும் சேவைக்குழாயின் அப்பாகமும் சபையின் ஆதனமாகக் கருதப்படல்வேண்டுமென்பதோடு, அத்தகைய குழாயடைப்பு, நீர்மானி மற்றும் சேவைக்குழாயின் பராமரிப்பு, பழுது திருத்தல், அப்புறப்படுத்துதல் ஆகியனவற்றிற்கான செலவையும் சபையே பொறுத்தல்வேண்டும்.

(2) தனியார் சேவை வழங்கப்பட்டுள்ள இடத்தின் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவரின் வேண்டுமென்றே புரியப்பட்ட செயலால் அல்லது அசட்டையால் (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட குழாயடைப்பு மற்றும்/அல்லது நீர்மானிக்கு எதும் சேதம் ஏற்படுமாயில், சபையால் மதிப்பிடப்பட்டபடி. குழாயடைப்பு மற்றும்/அல்லது நீர் மானியின் பழுதுபார்ப்புக்கான செலவு அத்தகைய சொந்தக்காரரால் அல்லது இடங்கொண்டிருப்பவரால் சபைக்குச் செலுத்தப்படல் வேண்டு மென்பதோடு, அத்தகைய கொடுப்பனவு நிறைவேற்றப்படும்வரை அத்தகைய இடத்துக்கான நீர் விநியோகத்தை நிறுத்திவிடுவதற்கான தத்துவம் மாநகர ஆணையாளருக்கு இருக்கும்.

25. இந்தத் துணைவிதிகள் நடைமுறைக்கு வரும் நாளுக்குப் பின்னர்—

(அ) ஒரு தனியார் சேவையால் விநியோகிக்கப்படும் நீரின் எப்பாகத்தையும் பிடித்து வைப்பதற்கு எந்த இடத்திலும் 100 கலன்களுக்கு அதிகமான நீரைக் கொள்ளக்கூடிய தொட்டி, தாங்கி அல்லது குளிதொட்டி எதனையும் நிறுவுதலோ அல்லது அமைத்தலோவாகாது ; அத்துடன்

(ஆ) அதன் தொட்டி, தாங்கி அல்லது குளிதொட்டியின் அளவு, வடிவம் ஆகியனவும் அவற்றின் எண்ணிக்கையும் ஆணையாளரது முன் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றால் அல்லாது, ஒரு சொந்தச் சேவையால் விநியோகிக்சப்படும் நீரின் எப்பாகத்தையேனும் பிடித்து வைப்பதற்கு எந்த இடத்திலும் தொட்டி, தாங்கி அல்லது குளிதொட்டி எதையும் நிறுவுதலோ அமைத்தலோவாகாது.

26. ஒழுக்கு ஏதும் எளிதில் கண்டுபிடிக்கப்படும்படியாக, ஒவ்வொரு தொட்டியினதும் வழிபொருட் குழாய் கட்டிடத்தின் வெளிப்பக்கத்துக்குக் கொண்டுவரப்படல் வேண்டுமென்பதுடன், ஒரு துலக்கமான நிலையில் முடிவுறவும் வேண்டும். எந்தக் காரணத்தின் மீதும், தொட்டி எதனதும் வழிபொருள் எதுவும் வடிகால், கழிவுப்பொருட் குழாயுடன் அல்லது நீராடுந் தொட்டி எதனதும் கழிவுப்பொருட் குழாயுடன், அளறுடன் அல்லது ஏனைய சௌக்கிய சாதனங்கள் எதனுடனும் அல்லது ஏனைய தொட்டி எதனது வழிபொருளுடன் இணைக்கப் படலாகாது. தொட்டி ஒவ்வொன்றும் ஒரு புறம்பான வழிபொருட் குழாயைக் கொண்டிருத்தல் வேண்டும்.

27. எந்த இடத்தினதும் சேவைக் குழாய், தொட்டி அல்லது ஏனைய சேவைப் பொருத்திகள் ஏனைய எந்த இடத்தினதும் சேவைக் குழாய், தொட்டி அல்லது ஏனைய சேவைப் பொருத்திகள் எதனுடனும் இணைக்கப் படலாகாது.

28. ஆணையாளரின் வெளிப்படையான அனுமதி இருந்தாலன்றி ஒரு தனியார் நீர்ச்சேவையின் பாகமாக அமையும் குழாய் ஒன்றும் கொதிகலன், ஒடுக்கி அல்லது பொறிமுறைச் சாதனம் எதனுடனும் நேரடியாக இணைக்கப்படலாகாது.

29. (1) தொட்டி ஒவ்வொன்றிலும் உட்தாரையில் ஒரு குண்டுக் கபாடமும், வெளித்தாரையில் ஒரு குழாயடைப்பும் சாதனமாக அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சாத்தியமான போதெல்லாம் அத்தகைய குண்டுக் கபாடம் போட்மௌத் வகையிலும் இரண்டு அங்குலத்துக்கு மேற்படாத சமாரான அளவிலும் இருக்கவேண்டுமென்பதோடு, குண்டுக் கபாடங்களுக்கான பிரித்தானிய பொது நியம அளவு 1212 : 1953 க்கு அமைவாகவும் இருத்தல் வேண்டும்.

(2) குண்டுக் கபாடம் போர்ட் மௌத் வகையினதாயல்லாதிருக்குமிடத்து, அக்குண்டுக் கபாடம் காத்திரமானதாகவும், தகுந்ததாகவும், அத்துடன் பின்வரும் தேவைப்பாடுகளுக்கு அமைந்ததாகவும் இருத்தல் வேண்டும் :—

(அ) உயரமுக்கக் கபாடம் ஒவ்வொன்றும் சதுர அங்குலத்துக்கு இருநூறு இறுத்தல் சோதனை அமுக்கத்திலும், இடையமுக்கக் கபாடம் ஒவ்வொன்றும் சதுர அங்குலத்துக்கு நூறு இறுத்தல் சோதனை அமுக்கத்தினதும், தாழ்வமுக்கக் கபாடம் ஒவ்வொன்றும் சதுர அங்கலத்துக்கு நாற்பது இறுத்தல் சோதனை அமுக்கத்திலும் அடைபடல் வேண்டும் ; அத்துடன், மாற்றிப் பொருத்தக்கூடிய துளை இருப்பு இல்லாத கபாடம் ஒவ்வொன்றும், அதன் மேல் முறையே எச்.பி., எம்.பீ., அல்லது எல்.பீ. என்னும் எழுத்துக்கள் வார்க்கப்பட்டதாக அல்லது பொறிக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டுமென்பதோடு அத்தகைய கபாடம் ஒவ்வொன்றும் மூடப்பட்டிருக்கையில் சதுர அங்கலத்துக்கு 200 இறுத்தல் அமுக்கத்தைத் தாங்கக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) ஆடுதண்டு வகையிலான கபாடம் ஒவ்வொன்றுக்கும், ஏற்ற வலுவூட்டிய இரப்பர் அல்லது அதை ஒத்த ஏதேனும் ஏற்ற பொருள் எதனாலுமான அடைப்பூன் ஒன்றிருத்தல்வேண்டும். கபாடம் இரண்டு அங்குலத்துக்கு மேற்படாத பருமன் உடையதாகவிருக்குமிடத்து, அடைப்பூணை ஆடுதண்டுடன் திருகிவிடப்பட்டுள்ள உள்மருங்குள்மூடியொன்றினால் மூடப்படல் வேண்டும் ;

(இ) இரண்டு அங்குலத்துக்கு மேற்படாத சமாரான பருமனுள்ள கவாடம் ஒவ்வொன்றும் அதன் ஆடுதண்டும், அரிக்கும் இயல்பை எதிர்க்கக் கூடிய கலப்பு உலோகத்தாலானதாய் இருத்தல்வேண்டும் என்பதுடன், மிண்டி அரிக்கும் இயல்பை எதிர்க்கக்கூடிய கலப்பு உலோகத்தால் அல்லது செம்பினாலான தாக இருத்தல்வேண்டுமென்பதுடன் சாதாரண இயக்கத்தின் போது ஏற்படும் தாக்கத்தைத் தாங்கும் உரமுடையதாகவுமிருத்தல்வேண்டும் ;

(ஈ) இரண்டு அங்குலத்துக்கு மேற்பட்ட சுமாரான அளவுள்ள இரும்பு உலோகத்தாலான கபாடம் ஒவ்வொன்றுக்கும் (பிரித்தானிய நியமமான 10 : 1962 அட்டவணை " டி " க்கு அமைய) அதன் உட்தாரையில் ஒரு விளிம்புப் புடைப்பு ஏற்படுத்தப்பட்டதாயும், பிரித்தானிய நியமம் 1218, 1946 இன் தேவைகளுக்கு அமையத் தோய்த்தும் அல்லது பிரித்தானிய நியமம் 1387 :1967 இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக நாகம் பூசியும் அரிக்கப்படாது பாதுகாக்கப்படல் வேண்டுமென்பதோடு, அதன் சகல இயக்கு பாகங்களும் துளை இரும்பும் இலகுவில் துருப் பிடிக்காத கலப்பு உலோகத்தால் மறைக்கப்பட்டுமிருத்தல் வேண்டும்.

(உ) சுமாராக பன்னிரண்டு அங்குலத்துக்கு மேற்படாத வெளிவிட்டமுடைய குண்டுக்கபாட மிதவை ஒவ்வொன்றும், செப்பு மிதவைகளுக்கான பிரித்தானிய நியமமான 1968 : 1953 க்கு அல்லது பிளாஸ்றிக் மிதவைகளுக்குரிய பிரித்தானிய நியமமான 2456 : 1954 அல்லது ஏனைய பொருட்களாலாய மிதவைகளுக்குரிய பிரித்தானிய நியமமான 1212 : 1953 க்கு அமைவாகவிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஒவ்வொரு குண்டுக்கபாடமும், ஒரு தொட்டியில் பொருத்தப்பட்டிருக்கையில், அதன் அரைவாசிக் கனவளவுக்கு மேற்படாது மிதவை அமுக்கப்படும்போது, குண்டுக் கபாடம் இயங்க வேண்டிய ஆகக்கூடிய அமுக்கத்தின்போதுங்கூட அதனுள் நீர் ஏறுததாக இருக்கப் பொருந்துவதாக துளையின் அளவும், மிதவையின் அளவும், மிண்டியின் நீளமும் ஒன்றுக்கொன்று அவ்வாறு விகிதசமமுடையனவாயிருத்தல் வேண்டும் ;

(எ) சேக்ரிப்புத் தொட்டிக்குப் பொருத்தப்படும் ஒவ்வொருகுண்டுக் கபாடமும் அல்லது மிதவை இயக்கு காடமும், அதில் நீர்மட்டத்துக்கு மேல உறுதியாகவும், வலுவாகவும் பொருத்தப் படவேண்டு மென்பதோடு, (அத்தகைய உட்தாரைக் குழாய் வலுவானதாயும் தொட்டியுடன் வலுவாகப் பொருத்தப்பட்டிருந்தாலுமன்றி) தொட்டி அதன் வழியும் மட்டத்திற்கு நிரப்பப்படும்பொழுது கபாட்த்தின் உடற்கோப்பின் எப்பாகமும் அமிழ்ந்துபோகாத நிலையில் உட்தாரைக்குழாய் தாங்கப்படாது வேறாகப் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் ;

(ஏ) தொட்டியின் வழிமட்டத்துக்குக் கீழ், நீரை இறைக்கக்கூடிய ஒழுங்கில் குழாய் ஒன்றுடன் ஒரு குண்டுக் கபாடம் அல்லது மிதவை இயக்குகபாடம் ஏற்படுத்தப்பட்டிருக்குமிடத்து, கபாடத்தினூடாக நீர் திருப்பப் பீறிடாதவாறு தடை செய்வதற்கு போதியதான அளவில் காற்றுத் துவாரம் ஒன்று அத்தகைய மட்டத்துக்கு மேலாகக்பாடத்தின் வெளித்தாரை அறையில் வைத்தல் வேண்டும்.

30. முக்கால் அங்குலத்துக்கு மேற்பட்ட உள்விட்டமுள்ள குழாய்வாய் எதனையும் தனியார் சேவை எதற்கும் எவரும் பொருத்துதல் கூடாது.

### மானிகள்

31. சபையின் நீர்வேலைகளில் இருந்து எந்த இடத்துக்கும் விநியோகமாகும் நீரை அளவிடுவதற்கான சகல மானிகளும், சபையால் விநியோகிக்கப்பட்டும், பொருத்தப்படவும் வேண்டுமென்பதுடன், சபையில் ஆதனமாகவுமிருத்தல் வேண்டும்.

32. நீர் விநியோகிக்கப்படும் இடத்துச் சொந்தக்காரரால் அல்லது இடங்கொண்டிருப்பவர் (தொழில், பொருட்கள் இன்னும் மேற்பார்வை உள்ளடங்க) மானிகள் பொருத்துவதற்கான செலவை முற்பணமாகச் செலுத்துதல்வேண்டும்.

33. மானிமூலம் நீர் விநியோகிக்கப்படும் எந்த வீட்டினதும் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பாளர் அம் மானியைப் பராமரிப்பதற்கும், பழுதுபார்ப்பதற்கும் ஆகும் செலவுகளைச் செலுத்துவதற்குப் பொறுப்பாக்கப்படமாட்டார்.

ஆயின், எப்படியிருப்பினும் அத்தகைய உரிமையாளரால் அல்லது இடங்கொண்டிருப்பவரால் வேண்டுமென்று செய்யப்பட்ட செயல் அல்லது அசட்டை எதனாலும் மானி பழுதடைந்து அதனைத் திருத்த அல்லது புதுப்பிக்க வேண்டிய அவசியமேற்படும் பட்சத்தில் ஆணையாளர் மதிப்பிடும் அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது புதுப்பித்தலுக்கான செலவைச் சபைக்குச் செலுத்தும்படி ஆணையாளர் அவருக்கு உரிமைக் கோரிக்கை விடுக்குமிடத்து அவர் அதனைச் செலுத்தல் வேண்டும்.

34. (1) மானிமூலம் நீர் விநியோகிக்கப்படும் வீடு எதனதும் சொந்தக்காரர் மானியை உபயோகித்தலுக்காகப் பின்வரும் விகிதப்படி கணக்கிடப்பட்ட வாடகையைக் காலாண்டுக்கு ஒரு தரம் முன்னதாகவே சபைக்குச் செலுத்தல்வேண்டும் அல்லது செலுத்துவித்தல் வேண்டும் :

| | ரூ. | ச. |
|---|---|---|
| 10" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 125 | 0 |
| 8" மானிக்கு ஒரு காலண்டுக்கு அல்லது காலண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 110 | 0 |

| | | |
|---|---|---|
| 6" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 90 | 0 |
| 4" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 70 | 0 |
| 3" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 45 | 0 |
| 2" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 25 | 0 |
| 1½" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 18 | 0 |
| 1" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 10 | 0 |
| ¾" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 8 | 0 |
| ½" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 7 | 0 |
| ⅜" மானிக்கு ஒரு காலாண்டுக்கு அல்லது காலாண்டின் ஒரு பாகத்துக்கு .. .. | 6 | 0 |

(2) இத்துணை விதியின் நோக்கத்துக்கு "ஒரு காலாண்டு" என்பது ஒவ்வொரு வருடத்திலும் சனவரி முதலாந் திகதி, ஏப்பிரல் முதலாந் திகதி, ஜூலை முதலாந் திகதியிலிருந்து தொடங்கும் தொடர்ச்சியான மூன்று மாதங்களைக் கொண்ட ஒரு காலம் எனப் பொருள்படும்.

35. (1) எந்தக் காலாண்டிலும் நுகரப்பட்ட நீர் முறையே அக் காலாண்டின் தொடக்கத்திலும் முடிவிலும் எடுக்கப்பட்ட முதல் வாசிப்பினதும் கடைசி வாசிப்பினதும் வித்தியாசத்தைக் கணக்கிடுவதன்மூலம், கீழ்க் குறிப்பிட்ட விதமாகக் கணிக்கப்படும்.

(2) முதல் வாசிப்பாவது, புதிதாகப் பொருத்தப்பட்ட ஒரு மானியைப் பொறுத்தமட்டில், அத்தகைய மானியைப் பொருத்தும்போது எடுக்கப் பட்ட வாசிப்பாகவும், ஏனையவற்றைப் பொறுத்தமட்டில் அக்காலாண்டுக்கு நேர்முந்திய காலாண்டில் எடுக்கப்பட்ட கடைசி வாசிப்புமாகவுமிருத்தல் வேண்டும். எக் காலாண்டுக்குமான கடைசி வாசிப்பாவது, அக்காலாண்டு முடிவடைவதற்கு முன் அல்லது பின் பத்து நாட்களுக்கு அதிகப் படாத ஒரு நாளில் எடுக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். ஆயின், பழுது பார்ப்பதற்காக மானி அப்புறப்படுத்தப்பட்டிருந்து முற்கூறப்பட்ட காலதுக்கான கடைசிவாசிப்பை எடுத்தல் சாத்தியமற்றதாயிருப்பின் அம் மானியை அப்புறப்படுத்து முன்பாக கடைசி வாசிப்பு எடுக்கப்படல் வேண்டும்.

(3) எக் காலாண்டு காலத்திலும் எவ்விடத்திலாயினும் இரண்டு அல்லது அதற்கதிகமான மானிகள் உபயோகிக்கப்பட்டிருப்பின், தனித் தனியாக அம்மானிகள் காட்டும் அளவுகளின் மொத்தமே அக் காலாண்டுக்குரிய நுகர்வாயிருத்தல் வேண்டும்.

36. (1) ஒரு மானி பழுதடைந்திருப்பதாகக் காணப்படும் அல்லது, பழுதுபார்ப்புக்கு அல்லது மாற்றஞ் செய்வதற்கு அப்புறப்படுத்தப்படும், அல்லது ஒரு புதிய மானி பொருத்தப்படும், அல்லது ஒரு பழைய மானி பொருத்தப்படும் பொழுதெல்லாம், அத்தகைய மானி ஊடாக விநியோகம் நடைபெறும் இடத்தில் அவ்விதமாக அதனை விளக்கும் நினைவுக் குறிப்பு ஒன்று விடப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) மானி பழுதடைந்திருக்குமிடத்து, அல்லது பழுதுபார்ப்பதன் பொருட்டு அல்லது வேறு ஏதும் காரணமாக அப்புறப்படுத்தப்பட்டிருக்குமிடத்து, 35 ஆம் துணைவிதியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், மானி பழுதடைந்து, அச்சேவை ஒரு மானியற்றிருந்த காலத்துக்கான நுகர்வின் அளவு, அத்தகைய காலத்துக்கு நேர்முந்திய காலாண்டில் பெறப்பட்ட நாளாந்த சாரசரி நுகர்வின்படி கணிக்கப்படும்.

37. (1) இடங்கொண்டிருப்பவர் எவரும் தமது இடத்திலுள்ள மானியின் செம்மையைப் பற்றிச் சந்தேகிக்குமிடத்து, அவரால் கோரிக்கை விடுக்கப்பட்டதன் பேரிலும், அத்தகைய இடங்கொண்டிருப்பவரால் ரூ. 20 க்கான ஒரு பரிசோதனைக் கட்டணம் முன்னதாகச் செலுத்தப்பட்டதன் பேரிலும், இடங்கொண்டிருப்பவர் அல்லது அவ்வகையில் இடங்கொண்டிருப்பவரால் அதிகாரமளிக்கப்பட்ட பேர் எவரின் முன்னிலையில் ஆணையாளர் அம்மானியைச் சோதிக்கச் செய்தல் வேண்டும். அத்தகைய சோதனையில் பெறுபேறு ஆணையாளரையும், இடங்கொண்டிருப்பவரையும் கட்டுப் படுத்தல் வேண்டுமென்பதோடு, 34 (2) ஆம் துணைவிதியில் வரையறுக்கப்பட்ட விதமான மானியால் காட்டப்பட்ட நீரில் அளவு, சோதனையின் பெறுபேறுக்கு அமைவாகத் திருத்திக் கொள்ளப்படவும் வேண்டும்.

(2) மானியால் பதிவுசெய்யப்பட்ட நீரின் அளவு சரியானதாக அல்லது மெய்யாக விநியோகிக்கப்பட்ட அளவில் நூற்றுக்கு இரண்டு வீதத்துக்கு மேற்படாத விநியோகிக்கப்பட்ட அளவிலிருந்து வித்தியாசப்படுமிடத்து, (1) ஆம் பந்தியின் கீழ் முன்னதாகச் செலுத்தப்பட்ட சோதனைக் கட்டணத்தை சபை பிடித்துக்கொள்ளல் வேண்டும்.

(3) மானியால் பதியப்பட்ட அளவு, மெய்யாக விநியோகிக்கப்பட்ட நீரில் இருந்து, மெய்யாக விநியோகிக்கப்பட்ட அளவில் நூற்றுக்கு இரண்டு சத விகிதத்துக்கு மேற்பட வித்தியாசப்படுமிடத்து, (1) ஆம் பந்தியின் கீழ், முன்னதாகச் செலுத்தப்பட்ட சோதனைக் கட்டணம் இடங்கொண்டிருப்பவருக்கு மீளளிக்கப்படல் வேண்டும்.

38. (1) ஆணையாளரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய தடவைகளில் மானிகள் வாசிக்கப்படல் வேண்டுமாயினும், அவை ஒரு காலாண்டில் மூன்று தடவைகளுக்குக் குறைவுபடாதிருத்தல் வேண்டும்.

(2) ஒரு மானி வாசிக்கப்பட்டவிடத்து, அம் மானியூடாக நீர் விநியோகிக்கப்படும் இடத்தில், இடங்கொண்டிருப்பவருக்கு முகவரியிட்டு அவ்வாசிப்புப் பற்றிய நினைவுக்குறிப்பு விடப்பட்டிருத்தல் வேண்டும்.

### நீர் விநியோகத்திற்கான கட்டணங்கள்

39. (1) வசிப்பிடத் தேவைகளுக்கான நீர், சபையின் தற்றுணிபின் படி, மானியூடாக அல்லது வேறு விதமாக விநியோகிக்கப்படலாமென் பதுடன், அதற்கான கட்டணங்கள் சபையின் தீர்மானத்தின் மூலம் காலத்துக்குக் காலம் நிர்ணயிக்கப்படும் அத்தகைய விகிதங்களுக்கு அமைவாக இருத்தல் வேண்டும்.

(2) வசிப்பிடத் தேவைகள் அல்லாது ஏனைய தேவைகளுக்கு சபையால் நீர் விநியோகிக்கப்படுமிடத்து, அத்தகைய நீர் மானியூடாகவே விநியோகிக்கப்படல் வேண்டும். ஆயின், எவ்வாறுயினும், எச்சந்தர்ப்பச் சூழ் நிலையிலும், சபை அதன் தற் றுணிபின்படி, அத்தகைய நீரை மானியூடாக அல்லாது வேறு விதமாகவும் விநியோகிக்கலாம்.

(3) சபையின் நீர்வேலைகளில் இருந்து நீர் விநியோகிக்கப்படும் இடம் எதிலும் சபை எந்த நேரத்திலதாயினும் ஒரு மானியை நிறுவலாம்.

40. (1) வசிப்பிட தேவை அல்லாத ஏனைய தேவைகளுக்கு மானியூடாக விநியோகிக்கப்படும் நீருக்கான கட்டணங்கள் காலத்துக்குக் காலம் சபையின் தீர்மானத்தால் நிர்ணயிக்கப்படும் அத்தகைய விகிதங்களுக்கு அமைவாக விருத்தல் வேண்டும்.

(2) வசிப்பிடத் தேவைகள் அல்லாத ஏனைய தேவைகளுக்கு, மானியூடாக அல்லாது வேறுவிதமாக நீர் விநியோகிக்கப்படுமிடத்து, ஒவ்வொரு தனிப்பட்ட சேவை சம்பந்தமாகவும் முற்பணமாக மாதாந்தம் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், காலத்துக்குக் காலம் சபையின் தீர்மானம் மூலம் நிர்ணயிக்கப்பட்டபடியான அத்தகைய விகிதங்களுக்கு அமைவாக விருத்தல் வேண்டும்.

41. (1) விநியோகத்தைப் பெறுபவர், இதன் அட்டவணையில் தரப்பட்டுள்ள இ–1 என்னும் படிவத்தில் ஒரு உடன்படிக்கையைச் செய்திருந்தால் அல்லாது ஒரு மானியூடாகவன்றி தனியார் சேவை ஒன்றிலிருந்து பெறப்படும் நீரை உபயோகித்தல் கூடாது.

(2) விநியோகத்தைப் பெறுபவர் இதன் அட்டவணையில் தரப்பட்டுள்ள இ–2 என்னும் படிவத்தில் ஒரு உடன்படிக்கையைச் செய்திருந்தால் அல்லாது ஒரு மானியூடாக தனியார் ஒன்றில் இருந்து பெறப்படும் நீரை உபயோகித்தல் கூடாது.

42. தனியார் இடம் எதற்கும் விநியோகிக்கப்படும் நீருக்கான கட்டணங்கள், அதன் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவரால், இதன் அட்டவணையில் தரப்பட்டுள்ள "ஈ" என்னும் படிவத்தில் ஒரு கணக்கு அளிக்கப்பட்ட நாளில் இருந்த பதினைந்து நாட்களுக்குள் ஆணையாளருக்கு அல்லது அதன் சார்பாக ஆணையாளரால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர் ஒருவரிடம் செலுத்தப்படல் வேண்டும். அத்தகைய கட்டணங்கள் கொடுக்குமதியான நாளில் அல்லது அதற்கு முன்செலுத்தப்படாவிடத்து, அந்த இடத்துக்கான நீரின் விநியோகத்தை ஆணையாளர் நிறுத்திவிடலாம்.

### நீர் வீணுவதையும் மாசுபடுவதையும் தடுத்தல்

43. சபைக்குரிய நீர்த்தேக்கம், நீரூற்று, தொட்டி, நிலையக்குழாய், குழாய் அல்லது வேறு நீர்வேலைகள் எதிலுமுள்ள நீரை, எவரும் எந்த அளவிலும் மாசுபடுத்தவோ அழுக்கடையச் செய்தலோ அல்லது குறையச் செய்தலோ அல்லது அத்தகைய வேலைகளைச் சேதமுறச் செய்தலோ அல்லது அவற்றில் ஈடுபடுதலோவாகாது.

44. ஆணையாளரோ அல்லது அவரால் அதன்சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட வேறுபேர் எவருமோ காலையில் எட்டுமணிக்கும் மாலையில் ஐந்து மணிக்குமிடைப்பட்ட எந்நேரத்திலும் சபையால் நீர் விநியோகஞ் செய்யப்படும் எவ்விடத்திலும் இடங்கொண்டிருப்பவருக்கு ஒரு மணித்தியாலத்துக்குக் குறையாத அறிவித்தல் கொடுத்தபின்னர், அத்தகைய இடத்தில் நுழைந்து, குழாய்கள், வேலைகள் மற்றும் பொருத்திகள் ஆகியனவற்றின் நிலைமைகளைப் பரிசோதித்தலும் அல்லது ஏதேனும் நீர் வீணாகின்றதா அல்லது தவறுகக் கையாளப்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தலாம். ஆணையாளரை அல்லது அத்தகைய வேறு ஒருவரை நியாயமான காரணமின்றி அத்தகைய இடத்தில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டால் அல்லது நியாயமான காரணமின்றி அத்தகைய பரிசோதனையைச் செய்யவிடாது தடுத்தால், அத்தகைய இடத்துக்கான நீர் விநியோகத்தை ஆணையாளர் நிறுத்திவிடலாம்.

45. (1) தனியார் நீர் விநியோகச் சேவையொன்றின் பாகமாய் அமையும் குழாய், குழாய் வாயில், கபாடம், மானி அல்லது ஏனைய பொருத்திகள் எதனதும் ஒழுங்குகள், பருமன், இருப்பு, தன்மை அல்லது நிலைமை சபையின் நீருதவு வேலைகளிலிருந்து விநியோகிக்கப்படும் நீரை, வீணுக்குதற்கு, வீண் விரயஞ் செய்வதற்கு, அளவுமீறி, உபயோகிப்பதற்கு அல்லது

தூய்மையைக் கெடுப்பதற்கு ஏதுவாக அல்லது நீருதவுவேலைகளிலிருந்து நீரைக் கட்டுப்படுத்த அல்லது பெறுவதற்குப் பாதகமாக இருப்பதாக நம்புதற்குக் காரணமிருக்குமிடத்து, இதனுடனுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள "உ" என்னும் படிவத்தில், அத்தகைய சேவை கொடுக்கப்பட்ட இடத்துச் சொந்தக்காரருக்கு அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு ஒரு அறிவித்தல் கொடுத்து, அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடிய மாற்றங்களை நிறைவேற்றும்படி ஆணையாளர் அவரைப் பணிக்கலாம். அச் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் ஆணையாளர் திருப்திப்படத் தக்கவாறு அம்மாற்றத்தை நிறைவேற்றுது அல்லது நிறைவேற்றுவியாது விடும் பட்சத்தில் சபையின் நீருதவுவேலைகளிலிருந்து அச் சேவையை ஆணையாளர் உடனடியாகத் துண்டித்துவிடலாம்.

(2) எந்த இடத்தினதும் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் எவரதும்பெயர் அல்லது வதிவிடம் அறியப்படாதிருக்கும் பட்சத்தில் (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவித்தல், எந்த இடத்துடன் தொடர்புடையதோ அந்த இடத்தின் துலக்கமான ஒரு இடத்தில் அது ஒட்டிவிடப்பட்டால், அச்சொந்தக்காரருக்கு அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு அது முறைப்படிகொடுக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

46. சபையின் நீருதவுவேலைகளிலிருந்து தனியார் சேவையொன்று நிறுவப்பட்டிருக்கும் இடம் எதனதும் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் அச்சேவையின் பாகமாகவுள்ள குழாய்வாயில், குழாய், மானி அல்லது வேறு பொருத்திகள் எதிலிருந்தேனும் நீர் வீணுக ஓடும்போதெல்லாம் அதனை ஆணையாளருக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

47. தனியார்சேவை எதனதும் பாகமாகவுள்ள குழாய் வாயில், குழாய், மானி, அல்லது வேறு பொருத்திகள் எதிலிருந்தேனும், நீர் வீணுக ஓடக் காணப்பட்டால், ஆணையாளர் அல்லது அவரால் எழுத்தில் முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட எவரும், அச்சேவையை சபையின் நீருதவுவேலைகளிலிருந்து உடனடியாகத் துண்டித்துவிடலாமென்பதுடன் அவ்விடத்துச் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் அவ்விதம் வீணுவதற்குக் காரணமாயிருந்தது எதுவோ அதனை அகற்றுகின்றவரை அத்தகைய சேவை மீண்டும் இணைக்கப்படமாட்டாது.

48. இத்துணை விதிகளின் எந்த ஏற்பாட்டின் கீழேனும், துண்டிக்கப்பட்ட தனியார்சேவை எதனையும் மீள இணைத்தற்கான செலவை அந்தச் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ள இடத்துச் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவரே ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

### புவித்தொடுப்பு இணைப்புகள்

49. (1) 500 உவோல்ற் அல்லது அதற்கதிகமான அழுத்தமுடைய மின்னோட்டத்தோடு ஊடாடும் மின்மாற்றி அல்லது வேறு மின்னுபகரணம் எதனதும் கவசத்திலிருந்து எவரும் புவித்தொடுப்பு இணைப்பு எதனையும் சபையின் நீருதவுவேலைகளுடன் அல்லது நீருதவுவேலைச் சாதனங்களோடு இணைக்கப்பட்டுள்ள தனியார்சேவை எதனதும்பாகமாகவிருக்கும் எந்தக் குழாயுடனும் அல்லது உபகரணத்தோடும் இணைத்தல் கூடாது.

(2) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மின்மாற்றியின் அல்லது மின்னுபகரணம் எதனதும் தரைத் தகடு அல்லது புவித்தொடுப்பு இணைப்பின் எப்பாகமும், சபையின் நீருதவுவேலைகளின் அல்லது சபையின் நீருதவு வேலைகளுடன் இணைக்கப்பட்டுள்ள எந்தத் தனியார் சேவையின் பாகமாகவுள்ள குழாய் அல்லது உபகரணம் எதிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு அடிக்கு அப்பாலிருத்தல் வேண்டும்.

50. மின் வெளிச்ச ஏற்பாட்டிலிருந்து மின்னோட்டத்தைப் பெறும் வானொலிப்பெட்டியொன்றுக்கு புவித்தடை இணைப்பு ஏதும் அவசியப்படுமிடத்து, அப்படியான புவித்தடை இணைப்பை சபையின் நீருதவு வேலைகளில் அல்லது சபையின் நீர்வேலைகளோடு இணைக்கப்பட்டுள்ள தனியார்சேவை எதனதும் பாகமாகவுள்ள குழாய் அல்லது உபகரணம் எதிலுமிருந்து இரண்டடிக்குக் குறையாத தூரத்தில் ஒருதரைத் தகட்டை வைப்பதன்மூலம் செய்துகொள்ளலாம்.

51. சபையின் நீருதவுவேலைகளோடு இணைக்கப்பட்டுள்ளதும் நீர்மானியொன்று நிறுவப்பட்டுள்ளதுமான இடம் எதிலும் புவித் தடை எதனையும் செய்யும் எவரும், அதனை அந்த மானியின் நுழைவாயில் பக்கத்தில் இருந்து அல்லது அந்த மானிக்குக் குறுக்கே பிணைப்பொன்றைச் செருகுவதன்மூலம் செய்துகொள்ளலாம்.

### பொது

52. பின்வருமாறுனவை பற்றி ஆணையாளர் திருப்திப்படுமிடத்து, கட்டணச் சட்டத்திற்கமைய அல்லது இத்துணை விதிகளுக்கு அமைய வருமதியாகவுள்ள அல்லது வருமதியாக வரக்கூடிய நீர் வரி, மானி, வாடகை, அல்லது வேறு பணத்தொகைகள் எதற்குமுள்ள உரிமைக்குக் குந்தகமில்லாமலே முற்றுக அல்லது பகுதியாக சபையின் நீருதவு வேலைகளுடன் இணைக்கப்பட்டுள்ள மூலக்குழாய், சேவைக் குழாய், பொது ஊற்று அல்லது வேறு ஏதும் உபகரணம் ஆகியவற்றின் ஊடாகவும் உள்ள நீர் விநியோகத்தைக் குறைக்க, தடுக்க, இடைநிறுத்த அல்லது மாற்றவோ செய்யலாம் :

(அ) நீருதவு வேலைகளிலிருந்து கிடைக்கக்கூடிய நீர் விநியோகம் போதாமலிருந்தால் ; அல்லது

(ஆ) மூலக் குழாய்களை அல்லது நீருதவு வேலைகளை நீடிப்பதற்கு, மாற்றியமைப்பதற்கு, அல்லது பழுதுபார்ப்பதற்கு அல்லது மூலக்குழாய்களோடு சேவைக் குழாய்களை இணைத்தற்கு அத்தகைய நடவடிக்கை உசிதமானது அல்லது அவசியமானதாக விருப்பின் ; அல்லது

(இ) ஒரு பொது நிலையக்குழாய்க்கு ஏற்பட்ட சேதம் காரணத்தால் அல்லது அதிலுள்ள நீர் எவ்வகையிலும் மாசடைதல் அல்லது வீணுதல் காரணத்தால் அச்செயல் உசிதமானதாக அல்லது அவசியமானதாகவிருப்பின் ; அல்லது

(ஈ) நெருப்பு பரவுவதனுல் நீருதவு வேலைகளுக்குச் சேதம் ஏற்படின் அல்லது ஏற்படக் கூடியதாகவிருப்பின்.

53. குழாயின் எப்பாகத்தினதும் உடைவால் அல்லது குழாய்ப் பொருத்திகளின் எப்பாகத்தில் இருந்தும் வழியும் நீரால் உண்டாக்கப்படும் நட்டம் எதற்கும், 18 ஆம் துணைவிதியின் கீழ் தனியார் சேவை எதற்கும் அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் அல்லது குழாய் அடைக்கப்பட்டிருக்கும் இடத்துச் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் எவருக்கும் இத்துணைவிதிகள் எவற்றின் கீழும் வழங்கப்பட்டுள்ள எந்த அனுமதியும் அல்லது எந்தச் சலுகையும் எந்த நோக்கத்திற்கேனும் சபையை ஏதேனும் பொறுப்புக்கு உள்ளாக்குகின்றனவெனக் கருதப்படாது.

54. ஒரு ஒப்பந்தத்தின் கீழேனும் அல்லது உடன்படிக்கையின் கீழேனும் அல்லது வேறு விதத்திலேனும் நீரின் விநியோகத்துக்கு, அதைப் பொறுத்ததான தவறுதலுக்கான நட்டங்களுக்கு, அத்தகைய தவறுதலுக்கு வழமைக்கு மாறுன வரட்சி, அல்லது வேலை எதனையும் மேற்கொள்ளல் காரணமாக விநியோகத்துடனுன தற்காலிக தலையீடு எதுவும் அல்லது இடையூறு ஏதும் காரணமாயிருந்தால், சபை பொறுப்புடையதாகவிராது.

55. எந்த இடத்தினதும் நீர் விநியோகத்தைத் துண்டித்து அல்லது நிறுத்தி விடுவதற்கு இத்துணைவிதிகளினுல் சபைக்கு அதிகாரமுள்ள சகல விடயங்களிலும், சபையினுல் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரும், அவரது வேலையாட்களும், அவ்வவ்விடத்தின் சொந்தக்காரருக்கு அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு ஆறு மணித்தியால அறிவித்தல் கொடுத்த பின்னர், காலை எட்டு மணிக்கும் மாலை ஐந்து மணிக்கும் இடைப்படும் நேரத்தில் அந்த இடத்தினுள் நுழைந்து, அந்த இடத்தின் நீர் விநியோகத்தைத் துண்டித்து, சபையின் சொத்தான குழாய், மானி அல்லது பொருத்துறுப்பு எதனையும் அகற்றலாம்.

56. (1) கட்டிடம் அல்லது கட்டிடங்கள் எதனையும் கட்டும் நோக்கத்துக்கு, சபையின் நீருதவு வேலைகளிலிருந்து எந்த இடத்துக்கும் தற்காலிக இணைப்பு ஒன்றின்மூலம் நீர் விநியோகிக்கப்படுமிடத்து, அந்தக் கட்டிடம் அல்லது கட்டிடங்கள் நிறுவப்பட்டதும் அந்த விநியோகம் நிறுத்தப்படல் வேண்டும்.

(2) (1) ம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நோக்கத்துக்காக விநியோகிக்கப்பட்ட நீருக்கான கட்டணங்கள், 39 ம் துணைவிதியில் வசிப்பிடத் தேவைகளாகவில்லாத வேறு தேவைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள விகிதங்களுக்கு அமைவாகவேயிருத்தல் வேண்டும்.

57. இத்துணைவிதிகளுக்கு அமையச் செலுத்தப்பட வேண்டிய பணங்கள் யாவும் ஆணையாளரிடம் அல்லது ஆணையாளரால் அதன் சார்பில் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

58. இத்துணைவிதிகளின் ஏற்பாடுகள் எதனதும் மீறுதல் ஒவ்வொன்றும் ஐம்பது ரூபாவுக்கு மேற்படாத ஒரு தண்டத்தால் தண்டிக்கப்படல் வேண்டுமென்பதுடன், தவறு தொடரப்படும் விடயத்தில், குற்றத் தீர்ப்புக்குப் பின் அல்லது ஆணையாளரால் அல்லது ஆணையாளரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் அவ்வித மீறுதலைக் கவனத்துக்குக் கொண்டுவருவதற்காக எழுத்தில் ஓர் அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர், அத்தவறு தொடர்ந்து புரியப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் பத்து ரூபாவுக்கு அதிகப்படாத மேலதிகக் குற்றப்பணம் விதிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

அட்டவணை

படிவம் அ (துணைவிதி 9)

யாழ்ப்பாண மாநகரசபை

நீருதவுவேலைத் திணைக்களம்

எண்.:

யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு,

இதன் அட்டவணையில் விபரித்த விதமாக, ..................... வட்டாரத்தில் ............................. தெருவில் இருப்பதான .................. என் வீட்டிற்கு

தனியார் சேவையை,
அமைக்க
மாற்ற
நீடிக்க
துப்பரவு செய்ய

எழுத்துமூலமான தங்கள் அங்கீகாரத்திற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றேன்.

இடங்கொண்டிருப்பவர் வாடகைக் குடியானல் வருடாந்த வாடகை ரூபா : ....................

இடங்கொண்டிருப்பவர் சொந்தக்காரராயிருப்பின் வருடாந்தப் பெறுமதி ரூபா : ....................

தற்போதைய சேவைக்குழாயின் அளவு : ....................

நீர் தேவைப்படுவது வசிப்பிட தேவைகளுக்கா அல்லது வேறு தேவைகளுக்கா ? : ....................

இடத்தில், இடங்கொண்டிருப்பது எந்த நோக்கத்தின் பொருட்டு ? : ....................

வைப்பில் இடப்பட்டுள்ள தொகை : ....................

அட்டவணை

| தனிப்பட்ட இடங்களில் குழாய்கள் பொருத்தல் | | குழாய்வாய் | | | தொட்டிகள் | |
|---|---|---|---|---|---|---|
| நீளம் | அளவு | எண் | நிலை | அளவு | கொள்ளளவு | நிலை |
| | | | | | | |

குறிப்புரை : ................................................................................................

தயவுசெய்து தெளிவாக எழுதுங்கள் :

*சொந்தக்காரரின் கையொப்பம் : ..................................

*சொந்தக்காரரின் பெயர் : ..................................

*சொந்தக்காரரின் முகவரி : ..................................

*இடங்கொண்டிருப்பவரின் கையொப்பம் : ..................................

*இடங்கொண்டிருப்பவரின் பெயர் : ..................................

*பொருந்தாதனவற்றைக் கீறிவிடுக.

அலுவலகத்தில் நிரப்பப்படவேண்டியது.

அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

..................................
ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

.................................. வரவு வைத்த தொகை

.................... இல் நீருதவுவேலைத் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

.................................. வேலை பூர்த்தி செய்யப்பட்டதன் மீதான அறிக்கை.

குழாய் வாய்களின் நிலைகளைக் காண்பித்து இடத்தின் ஒற்றை ரேகைப் படம் ஒன்றைக் கீழே உட்புகுத்தவும்.

குறிப்பு.—(1) நீர்ச் சேவைக்கான விண்ணப்பங்கள் யாவும் அலுவலக “ அ ” என்னும் படிவத்தில் செய்யப்படல் வேண்டும்.

(2) நீர்ச் சேவைக்கான சகல விண்ணப்பங்களும் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(3) ஒரு தனியார் நீர்ச்சேவை ஒன்று அனுமதிக்கப்பட்டிருக்குமிடத்து, சபையின் மூலக் குழாய்க்கும் அல்லது துணை மூலக்குழாய்க்கும், சேவையளிக்கப்படவுள்ள இடத்துக்கும் இடையிலான தொடர்பு, ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) தனியார் நீர்ச் சேவை ஒன்றுக்கு ரூ. ................ க்கான ஒரு கட்டணம் அறவிடப்படல் வேண்டும்.

(5) ஆணையாளரால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட பேர்களாலேயே சேவைக்குழாய்களும், பொருத்திகளும் இடப்படவும், பொருத்தப்படவும் வேண்டுமென்பதோடு, ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் உத்தியோகத்தர் ஒருவரால் அங்கீகரிக்கப்படும்வரை அவற்றை உபயோகித்தலாகாது.

(6) (அ) வசிப்பிட தேவைகளுக்கான நீர், மானியால் அல்லது வேறு விதமாக விநியோகிக்கப்படல் வேண்டும். மானியேதும் நிறுவப்படாவிடத்து, 39 ஆம் துணைவிதியிற் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தல் வேண்டும்.

(ஆ) வசிப்பிட தேவையல்லாத பிற தேவைகளுக்கு விநியோகிக்கப்படும் நீருக்கு, மானியால் கட்டணம் விதிக்கப்படும். மானி நிறுவப்படாதவிடத்து 40 ஆம் துணைவிதியிற் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

(7) ஒரு தனியார் நீர்ச்சேவை அமைக்கப்பட்டுள்ள ஒரு வீட்டின் அல்லது இடத்தின் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர், இடங்கொண்டிருப்பவர் மாறவிருக்குமிடத்து, ஆணையாளருக்கு அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(8) வீட்டில் அல்லது இடத்திலுள்ள குழாய் வாயில், மானி, குழாய் அல்லது பிற பொருத்திகளில் இருந்து நீர் வீணாக ஓடக் காணப்படுமிடத்து ஆணையாளருக்கு உடனடியாக அறிவித்தல் கொடுக்க வேண்டியது, ஒரு தனியார் நீர்ச் சேவை அமைக்கப்பட்டுள்ள ஒரு வீட்டின் அல்லது இடத்தின் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

..........................................
விண்ணப்பகாரர்.

படிவம் ஆ (23 ஆம் துணைவிதி)

மாநகரசபை அலுவலகம்,
.....................19........

எண் : ................

மாநகரசபையுடனுள்ள கணக்கு

| திகதி | விபரம் | ரூபா | சதம் |
|---|---|---|---|
| | ................................ வீதியிலுள்ள .......... ம் எண்ணுள்ள இடத்துக்கு சேவைக் குழாயை இடுவதற்கு அல்லது மானியைப் பொருத்துவதற்கு விநியோகிக்கப்பட்ட பொருட்களுக்கு.......... மேற்படி தொடர்பிலான தொழிலுக்கு, மற்றும் மேற்பார்வைக்கு .............. மூலக்குழாயைத் துளைத்து நீர் எடுப்பதற்கான கட்டணம் .......................... | | |
| | மொத்தம் | | |
| | வைப்பில் இட்ட தொகை | | |
| | வருமதியான மிகுதித் தொகை | | |

..........................................
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

யாழ்ப்பாண மாநகரசபை

படிவம் இ-1 (41 (1) ஆம் துணைவிதி)

1. ஒரு தரப்பில் ........................................ இல் இருப்பதும் ............ ம் வரிமதிப்பு எண்ணைத் தாங்கியிருப்பது மான இடத்தின் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவரான (இதன்மேல் " சொந்தக்காரர் " என அழைக்கப்படுபவரான).......... .................... க்கும், மறுதரப்பில் யாழ்ப்பாண, மாநகர சபைக்கும் (இதன்மேல் " சபை " என அழைக்கப்படும்) இடையில், மானியூடாக ஒரு தனியார் சேவைக்கு நீர் விநியோகிப்பதற்கான உடன் படிக்கை.

முன்சொல்லப்பட்ட இடத்துக்கு பின்வரும் நோக்கங்களுக்கு, அதாவது-

(அ) வசிப்பிடத் தேவைகள்,

(ஆ) வசிப்பிடமல்லாத ஏனைய தேவைகள்,

விநியோகம் அனுமதிக்கப்படுவதன்பேரில், இதன்பின் விவரிக்கப்படும் நிபந்தனைகளுக்கு அமைந்து நடக்கச் சொந்தக்காரர் இத்தால் சம்மதிக்கிறார் :—

(அ) ............ அங்குலக் குழாய் ஒன்றினூடாகவே நீர் விநியோகிக்கப்படல் வேண்டும்.

(ஆ) சொந்தக்காரர், 39 ஆம், 40 ஆம் துணைவிதிகளின் கீழ் விபரங்கூறப்பட்ட கட்டணத்தை ............ ஒன்றுக்கு தொகை ரூபா .................... வை முற்பணமாக மாநகரசபை ஆணையாளருக்குச் செலுத்தல் வேண்டும்.

வருமதியான நாளில் இருந்து 15 நாட்களுக்குள் நீருக்குரிய கட்டணங்கள் மாநகரசபை ஆணையாளரிடம் செலுத்தப்படாவிடத்து, சேவையை உபயோகிப்பதற்கான உரிமையை இழந்துவிட வேண்டுமென்ப தோடு, விநியோகத்தை மாநகரசபை நிறுத்திவிடலாம்.

உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரத் துணியும், தமது அல்லது அதன் எண்ணத்தையிட்டு மறுதரப்பினருக்கு முப்பது நாள் அறிவித்தல் கொடுத்து இருதரப்பினரிலும் எவரேனும் ஒரு தரப்பினர் உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரலாம். அவ்வாறு உடன் படிக்கை முடிவுறுத்தத் துணியும் பட்சத்தில், புதிதாக ஓர் உடன் படிக்கையைச் செய்யும்வரையில், சேவையை உபயோகிக்க இடத்தின் சொந்தக்காரரோ அல்லது இடங்கொண்டிருப்பவரோ உரித்துடையவ ராகார். இடங்கொண்டிருப்பவர் மாறவிருக்குமிடத்து, முறையான அறி வித்தலைச் சொந்தக்காரர் கொடுத்தல் வேண்டுமென்பதுடன், முற் போந்த நிபந்தனைகளுக்கு இசைந்தொழுகுவதாக எழுத்துமூலம் சம்ம திக்கும்வரை இடங்கொண்டிருப்பவர் எவரும் சேவையின் உபயோகத் துக்கு உரித்துடையராகார்.

சபையினாலாக்கப்பட்ட நீர் விநியோகம் தொடர்பான துணைவிதிகளின் ஏற்பாடுகள் இவ்வுடன்படிக்கையின் பகுதியாகவும், பாகமாகவும் எடுத்துக் கொள்ளப்படல் வேண்டும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து ............ ம் ஆண்டு ............ மாதத்தின் ............ ம் நாளான இந்நாளில், யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடப்பட்டது.

................................................,
சொந்தக்காரர்.

................................................,
யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர்,

கையொப்பத்துக்கான சாட்சிகள் :-

1. ........................................
2. ........................................

யாழ்ப்பாண மாநகரசபை

படிவம் இ 2 (41 (2) ஆம் துணைவிதி)

ஒரு தரப்பில் ........................................ இல் இருப்பதும் ............ ம் வரிமதிப்பு எண்ணைத் தாங்கியிருப்பது மான இடத்தின் சொந்தக்காரரான அல்லது இடங்கொண்டிருப்பவ ரான (இதன்மேல் " சொந்தக்காரரென " அழைக்கப்படுபவரான) ........................ க்கும் மறுதரப்பில்; யாழ்ப்பாண மாநகரசபைக்கும் (இதன்மேல் " சபை " என அழைக்கப்படுவதற்கும்) இடையில் மானியூடாக வசிப்பிட தேவைகளல்லாதவைவற்றிற்கு நீர் விநியோகிப்பதற்கான உடன்படிக்கை.

2. முன் சொல்லப்பட்ட இடத்துக்கு வசிப்பிட நோக்கங்களுக்கு அல்லாத தேவைகளுக்கு, அதாவது—

(அ) ........................................
(ஆ) ........................................
(இ) ........................................

நீரின் விநியோகம் அனுமதிக்கப்படுவதன்பேரில், பின்வரும் நிபந்தனை களுக்கு அமைந்து நடக்கச் சொந்தக்காரர் இத்தால் சம்மதிக்கிறார்.

(அ) ............ அங்குல மானி ஒன்றினூடாகவே நீர் விநியோ கிக்கப்படல் வேண்டும்.

(ஆ) மானியின் வாடகைக்கான, ஒரு காலாண்டுக்கு ரூபா .......... (ரூ. ..........) தொகையை முற்பணமாக சபையின் ஆணை யாளருக்குச் சொந்தக்காரர் செலுத்தல் வேண்டும் அல்லது செலுத்துவித்தல் வேண்டும்.

(இ) ஒவ்வொரு மாதத்திலும் விநியோகிக்கப்பட்ட நீருக்கும் சபையின் ஆணையாளருக்கு ஒவ்வொரு ஆயிரம் கலனுக்கும் ரூபா ...... (ரூ. ..........) வீதத்தில் சொந்தக்காரர் செலுத்துதல் வேண்டும் அல்லது செலுத்துவித்தல் வேண்டும். முதற் கொடுப்பனவு ............ மாதத்தின் முதல் நாளில் செலுத்தப்படல் வேண்டும்.

3. வருமதியான நாளில் இருந்து 15 நாட்களுக்குள் நீருக்குரிய கட்டணங்கள் மாநகரசபை ஆணையாளரிடம் செலுத்தப்படாவிடத்து, சேவையை உபயோகிப்பதற்கான உரிமை இழக்கப்படுமென்பதோடு, விநி யோகத்தைச் சபை நிறுத்தியும் விடலாம்.

4. உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரத் துணியும், தமது அல்லது அதன் எண்ணத்தையிட்டு மறுதரப்பினருக்கு முப்பது நாள் அறிவித்தல் கொடுத்து இருதரப்பினரில் எவரேனும் ஒரு தரப்பினர் உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவரலாம். அவ்வாறு உடன் படிக்கையை முடிவுறுத்தத் துணியும் பட்சத்தில் புதிதாக ஓர் உடன் படிக்கையைச் செய்யுமட்டும், சேவையை உபயோகிக்க, இடத்தின் சொந் தக்காரரோ அல்லது இடங்கொண்டிருப்பவரோ உரித்துடையவராகார்.

5. இடங்கொண்டிருப்பவர்கள் மாறவேண்டியிருக்குமிடத்து முறை யான அறிவித்தலைச் சொந்தக்காரர் கொடுக்கவேண்டுமென்பதோடு, முற்போந்த நிபந்தனைகளுக்கு இசைந்தொழுகுவதாக எழுத்துமூலம் சம்மதிக்கும்வரை இடங்கொண்டிருப்பவர் எவரும் சேவையின் உப யோகத்துக்கு உரித்துடையராகார்.

6. சபையினாலாக்கப்பட்ட நீர் விநியோகம் தொடர்பான துணை விதிகளின் ஏற்பாடுகள் இவ்வுடன்படிக்கையின் பகுதியாகவும், பாக மாகவும் எடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து .......... ம் ஆண்டு .............. மாதத்தின் ................ ம் நாளான இந்நாளில் .............. இல் கைச்சாத்திடப்பட்டது.

................................................,
சொந்தக்காரர்.

................................................,
யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர்.

கையெழுத்துக்கான சாட்சிகள் :

1. ........................................
2. ........................................

படிவம் ஈ (42 ஆம் துணைவிதி)

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், ..........19....

........................................ தெருவிலுள்ள .............. எண் இடத்துக்கு .............................. முடிவடையும் காலாண்டின்போது விநியோகிக்கப்பட்ட நீருக்கு, யாழ்ப் பாண மாநகரசபையுடனான கணக்கு.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| தொடர்பெண் : ............ நீர் பற்றிய கணக்கு .. | | |
| .................... தேதியில் வாசிப்பு .. | | |
| .................... தேதியில் வாசிப்பு .. | | |
| ஆயிரம் கலனுக்கு ரூ. ................ வீதம் .. | | |
| நுகரப்பட்ட நீர் ............ கலன்கள் .. | | |
| வசிப்பிடத் தேவைகளல்லாத பிறவற்றிற்கு மானியால் அளவிடாது விநியோகிக்கப்பட்ட நீர்.......... .. | | |
| வருமதியான தொகை .. | | |

இது கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் மேற்படி தொகையை யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்தில் செலுத்தும்படி தங்களை யான் கேட்டுக்கொள்ள வேண்டியவனாகவுள்ளேன்.

................................................,
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

படிவம் ' உ ' (45 ஆம் துணைவிதி)

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம், ........19......

சேவையிலுள்ள குறைபாட்டை மாற்றுவதற்கான அறிவித்தல்

........................................................ தெரு ................ எண்ணுள்ள வீட்டின் சொந்தக்காரருக்கு அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு.

மேற்கூறப்பட்ட இடத்துக்கான சேவையைப் பார்வையிட்டபோது குறையுடையதாகக் காணப்பட்டமையால், அவசியமானவையென யான் இத்தால் உறுதிப்படுத்தும் கீழ் விவரிக்கப்பட்ட மாற்றங்களை அல்லது திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டுமெனத் தங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். இவ்வறிவித்தல் கிடைக்கப்பெற்ற பின் ................ நாட்களுக்குள் எனது திருப்திக்கு ஏற்ப அத்தகைய மாற்றங்களை, அல்லது திருத்தங்களைத் தாங்கள் மேற்கொள்ளத் தவறினுல், சேவை, நீருதவு வேலைகளில் இருந்து துண்டிக்கப்படுமென்பதுடன், எனது திருப்திக்கு ஏற்ப அவை புதுப்பிக்கப்படும்வரை, மாற்றப்படும்வரை அல்லது திருத்தப்படும் வரையில் மீள இணைக்கப்படமாட்டாது.

........................................
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாற்றங்கள் அத்துடன்/அல்லது திருத்தங்கள் :—

4-117—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

மாநகரச்சபைகள் கட்டளைச் சட்டம்

(176 ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 (18) என்னும் பிரிவுகளின்கீழ் தெகிவளை-கல்கிசை மாநகரசபையினுல் ஆக்கப்பட்டு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 268 ஆம் பிரிவின்கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டு தேசிய அரசுப் பேரவையினுல் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதிகள்.

டீ. இராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந் உ.

1. இத்துணைவிதிகள் சினிமாக்களில் (தெகிவளை-கல்கிசை) புகைப் பிடித்தலைத் தடைசெய்தல் துணைவிதிகள்—1974 என எடுத்துக்காட்டப்படலாம்.

2. குறிக்கப்பட்டதொரு காலத்தின்போது சினிமா மண்டபத்திற்குள் ஆளெவரும் புகைப்பிடித்தலாகாது.

3. இரண்டாம் துணைவிதிக்கு முரணுகச் செயலாற்றும் ஆளெவரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ரூபா 50 க்கு மேற்படாத குற்றப்பணமொன்றிற்கும் ஆளாதல் வேண்டும்.

4. (அ) சினிமா மண்டபமொவ்வொன்றினதும் உரிமம் பெற்றவர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்த பட்சம் மூன்று அங்குல உயரமான தடித்த எழுத்துக்களில் " புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது " என்னும் வார்த்தைகளைக் கொண்ட அறிவித்தல்களை மண்டபத்தின் உள்ளே துலாம்பரமான இடங்களில் வைப்பதுடன்,

(ஆ) " மண்டபத்தினுள் புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது " என்னும் வார்த்தைகளைக் கொண்ட அறிவித்தலொன்றை வாயில் முகப்பிலுள்ள துலாம்பரமான ஓர் இடத்திலும் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

5. சினிமா ஒவ்வொன்றினதும் உரிமம் பெற்றவர் அவர் சினிமா மண்டபத்தினுள் குறிப்பிட்ட காலத்தின்போது எவ்வகையிலும் புகையிலையை விற்றலாகாது அல்லது விற்க அனுமதித்தலாகாது என்பது அவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தின் நிபந்தனையொன்றுக இருத்தல் வேண்டும்.

6. இத்துணை விதிகளில்—

" சினிமா " என்பது ஒளிப்படம் மாய விளக்குக்கூடு அல்லது இவை போன்ற வேறு கருவிகளின் வாயிலாகப் படங்களை அல்லது கட்புலப் பொருட்களைப் பகிரங்கமாக பார்வைக்கு வைப்பதற்காக பகிரங்க அரங்காட்டுகள் துணை விதிகளின்கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஒரு கட்டிடம் எனப் பொருள்படும்.

" குறிக்கப்பட்ட காலம் " என்பது பகிரங்க அரங்காட்டு ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னிருந்து ஆரம்பித்து அத்தகைய பகிரங்க அரங்காட்டு முடிவுறும் வரைக்கும் எனவும் அத்தகைய பகிரங்க அரங்காட்டு நடைபெறும் காலம் முழுவதையும் இது உட்படுத்தும் எனவும் பொருள்படும்.

" புகை பிடித்தல் " என்பது சுருட்டுகள், சிகரெட்டுகள், பீடிகள் ஆகியவற்றின் உருவில் அல்லது சுங்கான் அல்லது ஹுக்கா அல்லது வேறு வித உதவியுடன் புகையிலையை புகைத்தல் எனப் பொருள்படும் ; அத்துடன் பகிரங்க அரங்காட்டு என்பது (176 ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே கருத்தைக் கொண்டிருக்கிறது.

4-116—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

---

யாழ்ப்பாண மாநகரசபை

மாநகரசபைகள் கட்டளைச் சட்டம்

(252 ஆம் அத்தியாயமான) மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 ஆகிய பிரிவுகளின் கீழ், யாழ்ப்பாண மாநகரசபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச்சட்டத்தின் 268 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும் தேசிய அரசுப் பேரவையினுல் உறுதிப்படுத்தப்பட்டவையுமான துணை விதிகள்.

டீ. ராசேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1975 ம் ஆண்டு மார்ச்சு மீ 13 ந் உ.

வடிகால்கள் மேலாக செல்பாதைகள், அமைத்தல் தொடர்பான துணைவிதிகள்

1. இத்துணை விதிகளில் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினலன்றி " மாநகரசபைப் பிரதேசம் " என்பது மாநகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் யாழ்ப்பாண மாநகர சபைப் பிரதேசம் என வெளிப்படுத்தப்பட்ட பிரதேசம் எனப் பொருள்படும் ; அத்துடன் " மாநகரமுதல்வர் " என்பது யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வர் எனப் பொருள்படும்.

2. மாநகரசபைப் பிரதேசத்துக்குட்பட்டு, அதன் பக்கத்தில் வடிகால் கட்டப்பட்டிருக்கும் அல்லது அகழப்பட்டிருக்கும் தெரு எதனையும் அடுத்திருக்கும் வீடு காணி, அல்லது இடம் எதனதும் சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிப்பவர், மாநகர முதல்வரின் எழுத்துமூலமான அனுமதியுடனும் மாநகர முதல்வர் விதிக்கும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும், அவர் பணிக்கும் அத்தகைய விதத்திலும் தவிர பாலம், மேடை, கட்டிடம் எதையும் அல்லது எத்தன்மையான அமைப்பையும் அத்தகைய வடிகாலுக்கு மேலாக நிர்மாணித்தல் அல்லது இடுதலாகாது. அத்தகைய அனுமதியைப் பெற்று அத்தகைய பாலம், மேடை, கட்டிடம் அல்லது அமைப்பு நிர்மாணிக்கப்பட்டுள்ளவிடத்து அத்தகைய பாலத்தை மேடையை கட்டிடத்தை அல்லது எத்தன்மையான அமைப்பையும் அத்தகைய சொந்தக்காரர் அல்லது இடங்கொண்டிருப்பவர் மாநகர முதல்வரின் திருப்திக்கு ஏற்ப நல்லமுறையில் பராமரித்தல் வேண்டும் ; ஏதேனும் பாலம், மேடை, கட்டிடம் அல்லது அமைப்பு இல்லாத வீடு, காணி, அல்லது இடம் எதையும் ஆள் எவரும் அடைவதற்கு அனுக்கமுண்டென்று மாநகர முதல்வரின் அறிவுக்குப் புலப்படுமாகில், ஒரு பாலத்தை, மேடையை, கட்டிடத்தை அல்லது அமைப்பை உடனடியாக நிர்மாணிக்கும்படி சொந்தக்காரருக்கு அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு அவர் அறிவித்தல் கொடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும், அத்தகைய பாலம், மேடை, கட்டிடம் அல்லது அமைப்பை அல்லது அதன்கீழுள்ள வடிகாலை நல்ல ஒழுங்கில் பராமரிக்க அவர் தவறுவாராகில் அதனை நல்ல ஒழுங்கில் வைக்கும்படி உடைமையாளர் அல்லது இடங்கொண்டிருப்பவருக்கு மாநகர

முதல்வர் அறிவித்தல் கொடுத்தல் சட்டமுறையானதாதல் வேண்டும். அத்தகைய அறிவித்தல் வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் இந்தத் துணைவிதியின் கீழான ஏதேனும் அறிவித்தலின் தேவைப்பாடுகளை நிறைவேற்றத் தவறும் ஆளெவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும். என்பதுடன் அத்தகைய ஆள் அவரின் சார்பில் மாநகர முதல்வரால் செய்யப்பட்ட ஏதேனும் நிர்மாணத்தின் அல்லது பராமரிப்பின் செலவை மாநகர முதல்வருக்குக் கொடுத்தல் வேண்டும்.

3. ஒரு பொது வடிகாலின் அல்லது நீரோடை மேலான பாலப் பாதை அல்லது மேற்பாலப் பாதை ஒவ்வொன்றும், கொங் கிறீற்றால், செங்கல்லால் அல்லது மாநகர முதல்வரால் அங்கீ கரிக்கப்பட்ட வேறு பொருளால் கட்டப்படல் வேண்டுமென்பதுடன் வடிகால் அல்லது நீரோடையை அடைவதற்குப் போதிய வழி வகையுடையதாகவிருத்தலும் வேண்டும். வடிகால் அல்லது நீரோடையில் நீரோட்டத்திற்குத் தடையை உண்டாக்காதவாறு அத்தகைய பாலம் அல்லது மேற்பாலப் பாதை ஒவ்வொன்றும் அமைக்கப்படல் வேண்டும்.

4. இந்தத் துணைவிதிகளின் கீழான ஒவ்வொரு அறிவித்தலின் வழங்கல், மாநகர கட்டளைச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் செய்யப்படல் வேண்டும்.

5. இந்தத் துணைவிதிகளில் எதனையும் மீறிச் செயற்படும் ஆள் எவ ரும் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்ப துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்துக்கு ஆளாதல் வேண்டும் ; மீறுதல் தொடர்ந்து புரியப்படும் விடயத்தில் குற்றத்தீர்ப்பு அளிக்கப் பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மீறுதலைக் கவனத்திற் கொள்ளுமாறு பணித்த மாநகர முதல்வரின் எழுத்திலான அறிவித்தல் வழங்கப்பட்டதன் பின்னர், மீறுதல் தொடர்ந்து புரியப்படும் ஒவ்வொரு நாளுக்கும் இருபத்தைந்து ரூபாவுக்கு மேற்படாத மேலதிகக் குற்றப்பணத்திற்கு அவர் ஆளாதல் வேண்டும்.

4–113—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

# நானாவித அறிவித்தல்கள்

**அக்கரைப்பற்று வடக்கு கிராம சபையின் இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்**

இறைச்சிக்காரர் பற்றிய 1974 ம் ஆண்டின் 44 ம் இலக்கத் திருத்தச் சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி இதன்பின் காணும் அட்டவணையிற் காண்போர்களிடமிருந்து 1975 ஆம் ஆண்டின் ஆடு, மாடறுத்து வியாபாரம் செய்யும் புச்சர் " லைசன்ஸ் " தரும்படி விண்ணப்பங்கள் கிடைத்திருக் கின்றன.

இக்கிராமச்சபை இடப்பரப்பில் வதிவோர் எவரேனும் குறிக்கப்படும் நபர்களுக்கு " லைசன்ஸ் " கொடுப்பதை மறுக்கவிரும்பினுல் மறுப்பிற்கான காரணங்களை இக்கெசட்டில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் வேண்டு கிறேன்.

அட்டவணை

| | விண்ணப்பகாரர் பெயர் | விலாசம் | தொழில் நடத்துமிடம் |
|---|---|---|---|
| 1. | இ. குழந்தை | ஒலுவில்–2, பாலமுனை | ஒலுவில் கிராமம் |
| 2. | மீ. இஸ்மாயில் | ஒலுவில்–1, பாலமுனை | ஒலுவில் கிராமம் |
| 3. | சு. அப்துல் மஜீது | பாலமுனை | பாலமுனைக் கிராமம் |
| 4. | கே. எம். அனிபா | 2ம் கிராமம், அட்டாளைச்சேனை | அட்டாளைச்சேனை/2 ம் கிராமம் |
| 5. | எஸ். எல். மீராசாயிவு | 4ம் கிராமம், அட்டாளைச்சேனை | அட்டாளைச்சேனை 3/4 ம் கிராமம் |
| 6. | எம். கே. அமீர்முகைதீன் | தைக்காநகர், அட்டாளைச்சேனை | தைக்கா நகர், அட்டாளைச்சேனை |

பொ. பேட்டிசில்வா,
நிருவாகத்தர்,
அக்கரைப்பற்று வடக்கு கி. ச. பிரதேசம்.

4–68—04.04.75 ந் திகதிய வர்த்தமானி இல. 158

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணிமுதல் பி. ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக மைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சப்பிறீம் கோட் புறொக்ரரால்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கை குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | உள்ளூர் ச. | வெளியூர் ரூ. | வெளியூர் ச. |
|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. | 36 | 0 | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கால வெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | | விலை | தபாற்செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|---|
| (அ) | (i) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 0 50 | 0 20 |
| | (ii) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 1 0 | 0 20 |
| (ஆ) | (i) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. .. | 0 30 | 0 15 |
| | (ii) | வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. .. | 0 60 | 0 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.*

*முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.*

**அட்டவணை—1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் .. | .. வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | .. வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 18.4.75 |
| மே | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | .. வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 23.5.75 |
| யூன் .. | .. வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | .. வெள்ளி | 20.6.75 |

எல். டப்ளியூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
1975 ம் ஆடு *ஜனவரி* மீ 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.